விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 272 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 31 திங்கட்கிழமை (16.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
- சகல நாடுகளுக்குமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை.
- உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், எண்ணெய் வகைகள், கருவாடு என்பன எம்மூடாக அனுப்பிட முடியும்.
- கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna
208, Galle Road, Colombo - 06
077 755 4528
(3346)

# சட்டப்புத்தகத்தில் உள்ள 13ஐ அமுல்படுத்துவேன்

## கிளிநொச்சியில் சஜித் உறுதி

(கிளிநொச்சி)

**அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நிச்சயம் அமுல்படுத்துவேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ உறுதியளித்துள்ளார்.**




கிளிநொச்சியில் நேற்று (15) இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

இலங்கையின் பல்வேறு இன, மத சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது அவசியமாகிறது. மாகாண 15

### ஜனாதிபதித் தேர்தல்

## தமிழரசுக் கட்சி இன்று விசேட அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக விசேட அறிக்கையொன்றை இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சி வெளியிடவுள்ளது.

வவுனியாவில் வைத்து வெளியிடப்படவுள்ள குறித்த விசேட அறிக்கையை கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராஜா, சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் 15

## மோ.சைக்கிள் விபத்து; குடும்பஸ்தர் மரணம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் 21 வயதான இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி சில்வா வீதியில் நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த நபர் வீதியின் வளைவில் திரும்ப முற்பட்ட வேளை வேகக் 15



## நாமலின் வெற்றிக்காக மீண்டும் இனவாதம் கக்கினார் மகிந்த

(அம்பாறை)

தேசியம், பௌத்தம் பற்றி நாமல் ராஜபக்ஷ மாத்திரமே பேசுகிறார். ஏனைய வேட்பாளர்கள் புதிய அரசியலமைப்பின் ஊடாக நாட்டை பிளவுப்படுத்துவது பற்றி பேசுகிறார்கள். எக்காரணிகளுக்காகவும் நாட்டை 02

## விபரீத முடிவெடுத்த சிறுவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பெரியவிளான் பகுதியில் விபரீத முடிவெடுத்த 13 வயது சிறுவனொருவன் உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், 15



தமிழர் தேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் திலீபனின் நினைவேந்தல் வாரம் ஆரம்பம். (03ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றை ரணில் எந்நேரமும் கலைக்கலாம்

## எச்சரிக்கிறது தேசிய மக்கள் சக்தி

(கொழும்பு)

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால், அது 15

## உயிரிழந்த வளர்ப்பு நாய்க்கு பாண்ட் முழங்க ஊர்வலம்



(வட்டுக்கோட்டை)

கடந்த பத்தாண்டு காலமாக தனது வீட்டைக் காவல் காத்து வந்த வளர்ப்பு நாய்க்கு, வீட்டின் உரிமையாளர் இறுதி 15

வெல்க தமிழ்
சங்கு எங்கள் சின்னம்
எமது அரசியல் அபிலாஷைகள் ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
கட்சிகளைக் கடந்து
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!


எங்களிடம் இருக்கும் ஜனநாயக ஆயுதம் வாக்குகள்தான் இம்முறையாவது இலக்குத் தவறாது பிரயோகிப்போம்.
தமிழ்ப் பொது வேட்பாளர்
பா.அரியநேத்திரன்
- தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு -
(C-025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நின்று காக்கும் உங்கள் நாளிதழ்

## விற்பனைக்கு

- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் C.T.B பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக 2 கடைகளும்
- யாழ். நல்லூர் முருகன் கோயிலுக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும்
- யாழ். பிறவுண் வீதியில் 6 பரப்புக் காணியும்
- யாழ்.கே.கே.எஸ் வீதியில் ஜெகன் களஞ்சியத்திற்கு அருகில் 6 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.

(1954)

**077 723 2535**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ். சாவகச்சேரியில் 4 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 1 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A-9 வீதியில் இருந்து கல்வயில் செல்லும் பிரதான காபெற் வீதி முகப்புடன்
- A-9 வீதியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- சாவகச்சேரி பஸ் நிலையம் 1 ½ Km தூரம்
- சாவகச்சேரி மகளிர் பாடசாலை 1 Km தூரம்

தொடர்புகளுக்கு:

**077 294 1521**
**077 329 4130**

(1953)


## நாமலின்...

பிளவு படுத்த நாங்கள் இடமளிக்க போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாறையில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டின் தேசியப் பாதுகாப்பையும், ஒரு மைப்பாட்டையும் நான் உறுதிப்படுத்தினேன். அபிவிருத்திகளைத் துரிதமாக மேற்கொண்டு தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தினேன்.

2005 ஆம் ஆண்டு அரசாங்கத்தைப் பொறுப்பேற்கும் போது பொருளாதார நிலைமை 15 பில்லியன் டொலர்களாக காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டு 85 பில்லியன் டொலர் கையிருப்புடன் அரசாங்கத்தை ஒப்படைத்தேன்.

ஊழலை முடிவுக்குக் கொண்டு வருவ தாக குறிப்பிட்டுக் கொண்டு 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் தேசிய பொருளாதாரத்தையும், தேசிய பாதுகாப்பையும் பலவீனப்படுத் தியது.

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எம்மை ஊழல்வாதிகளாகச் சித்தரித்து அதிகாரத்தைக் கோரியவர்கள் இம் முறையும் அதிகாரத்தைக் கோருகிறார்கள்.

வெறுப்பினை முன்னிலைப் படுத்தி செயற்படும் இவர்களால் பொருளாதாரத்தை ஒருபோதும் மேம்படுத்த முடியாது. சூழ்ச்சிகளினால் தான் நாங்கள் 2015 ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்டோம். அந்த சூழ்ச்சி இன்றும் தொடர்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் பிரசார மேடைகளில் நாமல் ராஜபக்ஷவை தவிர்த்து எவரும் தேசியம் மற்றும் பௌத்தம் பற்றி பேசுவதில்லை. நாட்டை பிளவுப்படுத்தும் புதிய அரசியலமைப்பு பற்றி பேசுகிறார்கள். எக்காரணிகளுக்காகவும் நாட்டைப் பிளவுபடுத்த நாங்கள் இடமளிக்கமாட்டோம்.

தேசியத்தைப் பாதுகாப்பதற்கு அனைவரும் எம்முடன் கைகோரக்க வேண்டும். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் நிச்சயம் தோற்றம் பெறும் என்பதை உறுதியாக குறிப்பிடுகிறேன் என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ந-7)

## புலமைப்பரிசில் பெறுபேறுகள் 40 நாட்களில் வெளியாகும்

### பரீட்சை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை நேற்று நடைபெற்ற நிலையில் பரீட்சைப் பெறுபேறுகள் இன்னும் 40 நாட்களில் வெளியாகும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையானது 2 ஆயிரத்து 849 மையங்களில் நடைபெற்றதுடன், 3 இலட்சத்து 23 ஆயிரத்து 879 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


DHL | MoneyGram money transfer | Ria | WESTERN UNION WU

உலகெங்குமுள்ளஉறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப உறவுகளிடமிருந்து Western Union, Money Gram, Ria மூலம் அனுப்பியபணத்தினை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள நாடுங்கள்அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

(C-1190)

**SRI MURUGAN TELE COMMUNICATION & AGENCY POST OFFICE**
No.303, K.K.S Road, Jaffna. TEL : 076 315 6470

## லங்கா மஹறால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(336)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

WESTERN UNION WU | MoneyGram | Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974


## மரண அறிவித்தல்



பிறப்பு 22.06.1977 இறப்பு 01.09.2024

### நேசநாயகம் கென்ஸ்மோகன் (மோகன்)

தேவாலய வீதி, குப்பிளான் தெற்கு, குப்பிளானைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நேசநாயகம் கென்ஸ்மோகன் அவர்கள் கடந்த 01.09.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் நேசநாயகம் - அற்புதம் தம்பதிகளின் அன்பு மகனும் கிருஸ்ணன் - அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் கௌசலாவின் அன்புக் கணவரும் கயலினி, கவிமொழி, கவிநிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும் டொறின் நிலானி, டொறின் நிஷாமினி(டென்மார்க்), டொறின் நீரஜா, கென்ஸ் ஜெரோன், டொறின் நிந்துஜா, நிதன்ஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் விசிகரன், ஸ்ராலின்(டென்மார்க்), கணேஸ், ஜெயப்பிரசாந் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் (19.09.2024) வியாழக்கிழமை 16, Gray Court, 73, Mar5H Road, Pinner Ha55PD லண்டனில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தேவாலய வீதி, குப்பிளான் தெற்கு, குப்பிளான்.
தேவசகாயம்
077 838 7879

(1950)


பாற்கடலில் பள்ளிகொள்ளும் வல்லிபுரத்தானே எம் குறை தீர்க்க தேர் ஏறி வருவாயே!

புத்தம் புதிய தெரிவுகளுடன்

## வாணி ரெக்ஸ்





- திருமண பட்டுச்சாறி வகைகள்.
- பூப்புனித நீராட்டு விழா சாறி வகைகள்.
- பிறந்தநாள் விழாக்களுக்கான பாட்டி புறக் மற்றும் மொடல் கவுண் புதிய தெரிவுகள்.
- அரச, தனியார் ஊழியர்களுக்கான ஒரே நிறத்திலான சாறி வகைகள்.
- இந்தியாவில் இருந்து உடனுக்குடன் வெளிவந்த ஒன்லைன் சாறி வகைகள்.
- புதிய வகை சல்வார்/ லெகங்கா மஸ்தானி ஆடை வகைகள்.
- ஆண்களுக்கான அனைத்து வகையான புதிய வகை ஆடைகள்.
- சிறுவர்களுக்கான ஆடைகள்.

(C-1192)

அனைத்தையும் விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**வாணி ரெக்ஸ்**

இல.81 பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5578/ 021 222 9286/ 077 748 8093


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக தீபம் திலீபனின் 37 ஆவது நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்) ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாகதீபம் திலீபனின் 37 ஆவது நினைவு தினம், நேற்று யாழ்ப்பாணம், நல்லூர்ப் பகுதியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

தியாக தீபம் தீலிபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த 9.45 மணிக்கு நினைவேந்தல் ஆரம்பித்ததுடன், மாவீரர் றொஷானின் தாயார் இரத்தினசிங்கம் பொற்கொடியால்பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, திலீபனின் உருவப்படத்திற்கு



முன்னாள் போராளி ஒருவர் மலர்மாலை அணிவித்து மலர்தூவி, அஞ்சலி செலுத்தியதுடன் பலரும் உணர்வு பூர்வமாக கலந்துகொண்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிதாகத் திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும். சிறைகளிலும், முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். அவசர காலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். ஊர் காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும். தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து, தியாகதீபம் திலீபன் 15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையான 12 நாட்கள் அகிம்சை வழியில் யாழ்.நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி சாவைத் தழுவிக் கொண்டார். (நி-33)

## போலி வாக்கு செலுத்தினால்

# கடும் தண்டனை!

### எச்சரிக்கும் தேர்தல் ஆணைக்குழு

**(கொழும்பு)**

**ஜனாதிபதித் தேர்தலின் போது மோசடியான வாக்குகளை அல்லது அதற்கு ஆதரவளிப்பவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுமென தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் சிந்தக குலரத்ன தெரிவித்துள்ளார்.**

தேர்தல் ஆணைக் குழுவின் மேலதிக ஆணையாளர் சிந்தக குலரத்னவின் கூற்றுப்படி, தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றத்தால் குற்றம் நிரூபிக்கப்பட்ட ஒரு நபருக்கு 12 மாதங்களுக்கும் மேலான சிறைத் தண்டனை அல்லது 2 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

இந்தக் குற்றச்சாட்டில் குற்றம் நிரூபிக்கப்பட்ட ஒருவர், 7 ஆண்டுகளுக்கு வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படாமல் இருக்கவும், தேர்தலில் வாக்களிக்கத் தகுதியற்றவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தில் 2023 இல் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் அடிப்படையில் அபராதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## கிண்ணத்தை சுவீகரித்தது வலைப்பாடு ஜெகமீட்பர் அணி



பூநகரி உதைபந்தாட்ட தொடரை கைப்பற்றி வலைப்பாடு ஜெகமீட்பர் அணி சம்பியனானது.

உதைபந்தாட்ட சம்மேளனம், அங்கத்துவ கழகங்கள் பங்குபற்றும் பூநகரி லீக் கிண்ணம் லீக் 2024 உதைபந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் பூநகரி கிராஞ்சி செந்தாரகை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

பூநகரி உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ராஜ்குமார் தலைமையில் ஆரம்பமாகிய குறித்த போட்டியின் இறுதி ஆட்டத்தில் வலைப்பாடு மெசியா, வலைப்பாடு ஜெகமீட்பர் அணியினர் மோதிக் கொண்டனர்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆட்ட நேரத்தில் இரு அணிகளும் கோல்கள் எதுவும் பெறாத நிலையில் சமநிலை தவிர்ப்பிற்காக சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டு 4:3 என்ற கோல்கள் கணக்கில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணி வெற்றி பெற்றுபூநகரி லீக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

குறித்த உதைபந்தாட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரும் முன் னாள் இலங்கை உதை பந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவருமான ஞானப்பிரகாசம் அன்ரனி டெவின்சன் ( ஜெரால்ட்) மற்றும் விளையாட்டு கழக உறுப்பினர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(6-299)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 180 | 200 | 150-250 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 160 | 180 | 180-200 | 320 |
| தக்காளி | 250 | 200 | 250 | 150-200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 240 | 260 | 200 |
| கோவா | 200 | 350 | 300 | 280 | 320 |
| கரட் | 200 | 280 | 300 | 280 | 300 |
| பூசணி | 80 | 60 | 100 | 50 | 80 |
| புடோல் | 80 | 120 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 60 | 200 | 240 | 200 | 240 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 150-300 | 320 |
| பெரிய வெங்காயம் | 280 | 200 | 250 | 260 | 250 |
| பாகற்காய் | 200 | 350 | 300 | 350 | 400 |
| வெண்டக்காய் | 60 | 80 | 100 | 70-100 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 160 | 240 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 100 | 200-250 | 400 |
| லீக்ஸ் | 300 | 320 | 320 | 300 | 350 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 300 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 450 | 50 | 800 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 200 | 420 | 300 |
| போஞ்சி | 400 | 300 | 350 | 300-350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | -- | 300 | 200 |
| கீரை - 1 பிடி | 120 | 150 | 100 | -- | 120 |
| தேசிக்காய் | 400 | 300 | 300 | 80-100 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 140 | 120 | 300-350 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | -- | 90-130 | 800 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 400 | 600 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | -- | 150 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 150 | 70 | 90 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 100 | 150 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3222

லது




நதீஸ்




நமசியா




வதுஸ்




ராசன்




சுவஸ்திகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தேசமாக திரண்டு தலைவிதியை மாற்றியமைப்போம்

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**தமிழின எழுச்சியின் தடைகள் உடைத்து தமிழர் தேசமாய் அணி திரள்வோம் என தமிழ் மக்களுக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 2009 இற்குப் பின்னரான 15 ஆண்டுகள் காலத்தில் தமிழ் மக்கள் தேசமாகச் சிந்திப்பதிலிருந்தும் எழுச்சியடைவதிலிருந்தும் எங்களை விலகியிருக்கச் செய்வதில் சிங்கள-பௌத்த பேரினவாதம் ஏறக்குறைய வெற்றியடைந்திருக்கின்றது.

சாதிகளாக, மதங்களாக, பிரதேசங்களாக தமிழ் மக்களையும் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகளையும் உதிரிகளாக்கி எங்களின் கூட்டு மன வலுவைத் தகர்த்தெறிந்து உளவியல் ரீதியில் தோல்வி மற்றும் அடிமைத்துவ மனோநிலையினை எங்கள் மக்களிடையே விதைப்பதனை சிறிலங்கா அரசின் முகவர்களும் அவர்களது அமைப்புகளும் கனகச்சிதமாகச் செய்து முடித்துள்ளன.

தமிழ் மக்களினது அரசியற் பலத்தினையும் எழுச்சியினையும் இல்லாதொழிப்பதற்காகச் சாணக்கியம், ராஜதந்திரம் என்று பெயரிட்டு தமிழ்த் தரப்புகளால் முன்னெடுக்கப்பட்ட வெற்றுக் காசோலை அரசியல் பயன்படுத்தப்பட்டது. அதன் விளைவே கடந்த 2010, 2015, 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஸ்ரீலங்காவின் அரச தலைவர் தேர்தல்களில் தமிழ் இனப்படுகொலை பொறுப்பாளிகளான ஒரு தரப்பினரை எதிர்ப்பதாகக் கூறி இனப்படுகொலைக் குற்றத்தைப் புரிந்த ஸ்ரீலங்காவின் இராணுவத் தளபதி, பதில் பாதுகாப்பு அமைச்சர், போர்க்குற்றம் புரிந்த பெருமளவான இராணுவத்தினரின் ஆதரவினைப் பெற்ற நபர்களுக்கு வாக்களித்தோம். பரிகார நீதியைக் கோர வேண்டிய நாம் எமது அரசியற் தலைமைகளினால் கண்மூடித்தனமாக வழி நடத்தப்பட்டோம்.

தமிழ்த்தேசியம் பேசுகின்ற கட்சிகளில் பயணிப்போர்கள் அனைவரும் தமிழினத்தின் விடுதலைக்கு, மேன்மைக்கு உழைப்பவர்கள் என்று நம்பி ஏமாந்த எங்களுக்கு புலித்தோல் போர்த்திய நரிகளின் ஊளையிடுதல்களையும் கூச்சல்களையும் உதறித் தள்ளி தமிழர் தேசமாக எங்கள் தலைவிதியை நாங்களே மாற்றி எழுதும் பெருவாய்ப்பு இனப்படுகொலை நிகழ்ந்து 15 ஆண்டுகளின் பின் கனிந்துள்ளது.

தமிழ் மக்களைத் தேசமாய் அணி திரட்டுவதற்கும், பன்னாட்டுச் சமூகங்களிற்கு விடுதலைக்கான எங்களின் கூட்டு வேட்கையினையும் கூட்டு மனோபலத்தினையும் வெளிப்படுத்துவதற்கும் எங்களிற்குள்ள ஒரேயொரு வாய்ப்பாகத் தமிழ்ப் பொதுவேட்பாளர் எண்ணக்கருவினை நாங்கள் பலப்படுத்த வேண்டும். இது ஒரு காத்திரமான வழிமுறை. இது எமது வரலாற்றுக் கடமை. தமிழ்ப் பொது வேட்பாளர் ஸ்ரீலங்காவின் அரச தலைவர் இருக்கையை வெல்லப் போகின்றவரல்ல மாறாகத் தமிழ் மக்களை அணிதிரட்டுவதில் வெல்லப் போகின்றவர்.

இனியாவது ஏமாற்றும் கபட அரசியலிற்குப் பலியாகாமல் தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுக்கோ வெளித்தரப்புகளுக்கோ சென்று சேர்வதைத் தவிர்த்து தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தீர்மானங்களைத் தமிழ் மக்கள் கூட்டாக மேற்கொள்ள வேண்டும். தவறுவோமேயானால் நாங்கள் அரசியல் பிழைத்த மக்களாக்கப்படுவோம்.

நாங்கள் மாறி மாறி சிங்கள ஆட்சியாளர்களுக்கு வாக்களிக்க வழிநடத்தப்பட்டோம். இதனால் தமிழ் மக்களின் நிலை, அரசியல், சமூக ரீதியில் பரிதாபகரமாய் போனதே அன்றி வேறதுவும் நிகழவில்லை. உரிமைகளுக்கான தமிழரின் அரசியல் இன்று சலுகைகளுக்காகத் துவண்டு போயுள்ளது. இந்தச் சூழ்நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறங்கியுள்ள பா.அரியநேத்திரனுக்கு அவரின் சங்குச் சின்னத்திற்கு வாக்களிப்போம். மாற்றுக் கருத்துக்கள் இருப்பினும் கட்சி வேறுபாடுகள் கடந்து வடக்கு-கிழக்கு, மலையகம், இதர பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் சங்கு சின்னத்திற்கு வாக்களித்து எங்கள் திரட்சியை இத்தேர்தலில் வெளிப்படுத்துவோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# 90 ஆவது ஆண்டு நிறைவும் முத்தமிழ் விழாவும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அயலில் உள்ள எட்டுப் பாடசாலைகளை இணைத்து முத்தமிழ் விழா நாளை செவ்வாய்க்கிழமை யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலய மண் டபத்தில் பாடசாலையின் முதல்வர் லயன் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஸ்தாபகரின் பேரனார் மாணிக்கவாசகர் ஜெயக்குமார் (லண்டன்), சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன், கௌரவ விருந்தினராக யாழ். கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பாலசிங்கம் வாசுதேவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் ஸ்தாபகர் வைத்தியர் அமரர் அப்பாப்பிள்ளை சின்னத்துரையின் திருவுருவச் சிலை திறந்து வைப்பும் பாடசாலையின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி முத்தமிழ் மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (நி-6)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் கிளிநொச்சி டிப்போச் சந்தியில் அமைந்துள்ள பசுமைப் பூங்காவில் நடைபெறும். (நி-6)

# இராசிபலன்

16.09.2024
ஆவணி 31 திங்கட்கிழமை
திரயோதசி பிற்பகல் 1.34 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 3.57 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணி வரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை
சந்திராஷ்டமம்- திருவாதிரை, புனர்பூசம்

வளவன்


மேஷம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள்.


ரிஷபம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.


மிதுனம்

பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், விட்டுப் போன தொடர்புகள் மீண்டும் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.


கடகம்

நேசித்த ஒருவருடன் யோசித்து பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள்.


சிம்மம்

நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கன்னி

மறைமுகப் போட்டிகள் மாறும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.


துலாம்

கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.


விருச்சிகம்

சுப காரியப் பேச்சுக்கள் முன்னேற்றம் தரும், உறவினர் வருகையுண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


தனுசு

ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தை கொடுக்கலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்கள், நண்பர்கள் [illegible] நன்மையுண்டு.


மகரம்

அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பொது வாழ்வில் புகழ் கூடும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், இல்லத் தேவைகள் பூர்த்தியாகும்.


கும்பம்

மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள்.


மீனம்

ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், தொழிலில் உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, மூத்த சகோதரர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர்.

**உதட்டில் உறவு உள்ளத்தில் பகை வேண்டாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணை வீதிக் கரையில் வீசப்பட்டுள்ள மருத்துவ கழிவுகள்

## பொதுமக்கள் விசனம்



(யாழ்ப்பாணம்)

பண்ணை வீதியின் கரையோரத்தில் மருத்துவக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளதாக அவ் வீதியினால் பயணிக்கும் பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். தீவகப் பகுதியின் பிரதான பண்ணை வீதியின் மண்டைதீவு சந்தியை கடந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் பாவிக்கப்பட்ட ஊசி மருந்து குப்பிகளும், பயன்படுத்தப்பட்ட சிரஞ்சிகளும் கரையோரத்தில் வீசப்பட்டுள் ளன.

இப் பகுதியில் காலை, மாலை வேளைகளில் உடற்பயிற்சியில் ஈடுபடுவோர் மற்றும் போக்குவரத்தில் ஈடுபடுவோர் அசௌகரியத்திற்கு உள்ளாவதுடன் சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிக்கப்படுவதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவித்தனர். (6)

# சேதமாக்கப்பட்ட நாவுக்கரசர் சிலை

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் காணப்பட்ட 20வருடங்கள் பழமை வாய்ந்த திருநாவுக்கரசர் சிலை அண்மையில் இனந்தெரியாத நபர்களால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாடசாலை நிர்வாகத்தினரால் வலயக்கல்வி அலுவலகம் மற்றும் பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-30)

# எனது 33 வருட ஆன்மீகப் போராட்டப் பாதையிலே



**ரஷ்யா- உக்ரைன் போர்**

யுத்தத்தை உடன் நிறுத்துக! உலக மகாயுத்தம் வேண்டாம்! வேண்டாம்! என்னும் தலைப்பிலே (06.03.2022) வலம்புரிப் பத்திரிகையிலே விளம்பரச் செய்தியாக வெளிவந்ததை யாவரும் அறிவீர்கள். சுழிபுரம்- பறாளாய் சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகர் காட்டியருளிய தர்சனங்களின் படி இந்தப் போரிலே இந்திய அரசு தலையிடுவதையே காட்டியருளினார்.

எனவே இதில் மத்திய அரசு தலையிட்டு யுத்த நிறுத்தம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க இறையருள் 06.03.2022 வேண்டி இரவு 7.00 மணியளவில் 108 விடி விளக்குகள் எம்பெருமானுக்கு ஏற்றி வைக்கப்பட்டதை யாவரும் அறிவீர்கள்.

இதன் பெறுபேறாகவே தற்போதைய இந்திய வெளிவிவகார அமைச்சரின் அறிக்கையும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் நடவடிக்கைகளும் ஈசுர விநாயகரின் தெய்வீகத்தை யாவருக்கும் வெளிப்படுத்துகிறது. விரைவாக இந்தியாவின் தலையீட்டினால் ரஷ்யா- உக்ரைன் யுத்த நிறுத்தம் ஏற்படும் என்ன ஆச்சரியம்!

(06.03.2022) அன்றைய தினமே பலாலி இராணுவக் கட்டளைத் தளபதியும் அவரது மனைவியும் உயர் அதிகாரிகளும் எமது ஆலயத்தை தரிசிக்க சமாதானப்பூஜைக்கு வேண்டிய அர்ச்சனைப் பொருட்களுடன் வருகின்றனர்.

அடியேன் காலைப்பூஜை முடித்ததும் கோபுரக் கதவைச் சாத்துவதற்கு தயாராகும் போது ஓர் இராணுவ வீரர் ஓடி வந்து சாமி கதவைச்சாத்த வேண்டாம். எங்கள் பெரியவர் வருகின்றார் எனக் கூறினார்.

சற்று நேரத்திலே கோயிலின் முன்னால் நிறைய இராணுவ வாகனங்கள் குவிகின்றன. இராணுவத் தளபதியாரென்று எனக்கோ தெரியவில்லை.

காலணிகளைக் கழற்றுகின்றனர். கோபுர வாசலின் முன்னால் வந்து தனது மேலங்கியைக் கழற்றிவிட்டு சாமி "ஆயுபோவன்" என்று கைகூப்புகின்றார். நானும் "ஆயுபோவன்" என்று பதில் கொடுத்தேன்.

நான் தான் வட பகுதி இராணுவக் கட்டளைத் தளபதி என்றார். அவருடன் மனைவியும் அர்ச்சனைத் தட்டை ஏந்திய வண்ணம் இக் கோயில் யாழில் மிகவும் பழைமையானதும் புதுமையானதும் ஒரு தனித்துவமானது என்றும் கேள்விப்பட்டுள்ளேன். இங்கே சமாதானம் வேண்டி பூஜை செய்யவும் கோயிலின் வரலாற்றை சாமியிடம் அறியவும் வந்துள்ளேன் என்றார். அப்போது அடியேனும் அக் குழுவினருடன் வீதியைச் சுற்றிவரும் போது கோயில் எந்தக் காலம் சாமி என்று கேட்டார். போர்த்துக்கேயர் காலத்திற்கு முந்திய சோழர்காலம் என்றேன்.

அப்படியாயின் வெள்ளை வைரக் கல்லால் கட்டப்பட்டு இருக்கிறதே இது எவ்வாறு பழமை? என்று கூறுவீர்கள் இல்லை இல்லை இது 17 ஆம் நூற்றாண்டளவில் கட்டப்பட்ட புதிய கோயில், பழைய கோயில் முதிரைக் கற்களாலும் சுண்ணாம்புக் கற்களாலும் கட்டப்பட்டு இக் கோயிலின் சற்று வடக்குப் பக்கமாக காணப்பட்ட பழைய தீர்த்தக் கிணற்றுடன் அமையப் பெற்றது.

இதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. இவருடைய நாமம் ஈசுர விநாயகர். இப் பெயருடன் இலங்கையிலே உள்ள ஒரே ஒரு கோயில் இது தான். மறுபெயர் கண்ணைக் கொத்திய காக்காப்பிள்ளையார். அதன் கதையையும் கூறினேன். சோழியபுரத்தின் வரலாற்றையும் சுழிபுரத்தின் சிறப்புக்களையும் கூறினேன். பின்னர் சமாதான அரண், மத நல்லிணக்கக் கோபுரம், இன நல்லிணக்கக் கோபுரம் யாவற்றையும் பார்வையிட்ட பின்னர் சமாதான அரணிலே அரசியல் தலைவர்களின் படங்கள் காணப்படுகின்றன.

அவை பற்றி என்ன கூறுகிறீர்கள் என்று கேட்டார். அப்போது தான் நான் ஒரு ஆன்மீகவாதி, ஆன்மீகப் போராட்டத்தை செய்து வருபவர்கள் என்றதும் ஆச்சரியம் அடைந்தார். அப்படியாயின் சாமி நீங்கள் என்ன தியானங்கள் என்னென்ன பாவனையைச் செய்கிறீர்கள் என்று கூறுங்கள் என்றார். நாம ரூப பாவனை, ஆனா பானா, சக்தி பாவனை, மைத்திரீ பாவனை, எந்த மண்டபத்திலே இருந்து இந்த பாவனைகளைச் செய்கின்றீர்கள்? கோயிலின் மகா மண்டபத்தைக் காட்டினேன்.

அரசியல் தலைவர்களின் படங்களை வைத்து நீங்கள் பாவனா செய்யும் போது அவர்களின் வெற்றி, தோல்வி, நடத்தைகள் போன்றவற்றை அறிய முடிகின்றதா? ஆம். வெற்றிகண்டுள்ளீர்களா? ஆம். உங்கள் ஆன்மீகப் போராட்டத்தில் முக்கியமான ஒன்றைக் கூற முடியுமா? ஆம். கூறுங்கள் இன்னும் 3 வருடங்களில் ஶ்ரீலங்கா இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் போய்விடும். சாமி என்ன குறுகிய காலத்தையே சொல்லுகிறீர்கள்.

நீண்ட காலமாகாதா? இல்லை 3 வருடமே எனது கால அவகாசம். சாமி நன்றி இதோ அர்ச்சனையை செய்யுங்கள் எல்லோரும் பஞ்சாராத்தை வணங்குகின்றனர்.

இன்று இரவு ரஷ்யா- உக்ரைன் யுத்த நிறுத்தம் வேண்டி 108 விடி விளக்குகள் ஏற்றி வழிபாடு செய்யப் போகின்றோம் என்றதும் சாமி குறை நினைக்க வேண்டாம் எனக்கு ஒரு அவசர வேலை இருக்கிறது. பலாலி இராணுவ முகாமிலிருந்து உயர் அதிகாரிகள் உட்பட பல இராணுவத்தினரை அனுப்பி வைக்கிறேன் என்று விடை பெற்றுச் சென்று விட்டார்.

அவர் கூறியவாறு அன்றைய சதுர்த்தி விடிவிளக்குப் பூஜையில் பலாலி இராணுவத்தினரே கூடுதலாக விடி விளக்கை ஏற்றி பங்கு கொண்டனர் என்பதை அனைத்து மக்களுக்கும் அறியத் தருகின்றேன். இதுவும் ஈசுர விநாயகரின் ஒரு திருவிளையாடலே என்பதை உணர்வோமாக.

**இன்னும் வேண்டுமா?**

**என் அன்பு உள்ளங்களே!**

(02.09.2024) அன்று வட்டுக்கோட்டை பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவர் முச்சக்கரவண்டியிலிருந்து இறங்கி ஆலயத்திற்கு வந்தார்கள் என்ன என்று கேட்டேன். நாளை (03.09.2024) ஶ்ரீலங்கா பொலிஸ் தினவிழா. இவ் விழாவை பறாளாய் ஈசுர விநாயகர் ஆலயத்திலே பூஜை வழிபாடுகளுடன் கொண்டாடுவதற்கு சாமியிடம் கூறி என்ன பூஜைப் பொருட்கள் தேவை என்பதையும் கேட்டுவாருங்கள் என்று பொறுப்பதிகாரி அனுப்பியிருந்தார்.

அதன்படியே 03.09.2024 அன்று காலை 10 மணியளவில் ஶ்ரீலங்கா பொலிஸ் தினவிழாவை ஈசுர விநாயகரின் விசேட பூஜை வழிபாடுகளுடன் சிறப்பாகக் கொண்டாடினோம்.

அன்றைய தினம் வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட பல பொலிஸ் உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

அவர்களை ஐயாவே ஆசிர்வதித்து சற்று நேரம் வரவேற்புரையை நிகழ்த்தினேன். அதில் குறிப்பாக நவீன கால இறைவனின் தொழிற்பாடு யாது? அதாவது ஆண்டவன் கீழ் நிலையிலுள்ள மக்களை படிப்படியாக மேல் நிலைக்கு கொண்டு செல்கின்றார்.

மேல் நிலையில் உள்ளமக்களை படிப்படியாக கீழ் நிலைக்குக் கொண்டு வருகின்றார். இதையே கண்கூடாகப் பார்க்கின்றோம். இன்றைய அரசின் நடவடிக்கைகளும் அரசின் வெளியுறவு அணிசேராக் கொள்கையையும் அரசியல் தலைவர்களின் பேச்சையும் (இலங்கை, இந்திய உறவு தரை வழிப்பாதை, இந்திய இலங்கைப் பாலம் இந்திய இலங்கை வர்த்தகம் போன்ற) விடயங்களை உற்று நோக்குகின்ற போது அணிசேராக் கொள்கை அணிசேரும் கொள்கையாக மாற்றம் அடைந்து இலங்கை வாழ் சிங்கள இனம் சிறுபான்மை இனமாகவும் தமிழர்கள் இலங்கையின் பெரும்பான்மை இனமாகவும் மாற்றம் பெற்று விடும் என்று எண்ணத் தோன்று கின்றது என்று கூறினேன்.

அத்துடன் யாழ். இராணுவத் தளபதி இந்த ஆலயத்திற்கு கடந்த இரண்டரை வருடங்களுக்கு முன்னதாக வருகை தந்து வணங்கிச் சென்றதையும் தளபதிக்கு எனது ஆன்மீகப் போராட்டப் பெறுபேற்றையும் கூறியிருந்தேன்.

அதாவது ஶ்ரீலங்கா அரசு இன்னும் 3 வருடங்களில் இந்தியாவின் கட்டுப்பாட்டிற்குள் போய்விடும்.

இதைக் கேட்டதும் பொலிஸ் பொறுப்பதிகாரி சாமியின் வாக்கின் படி இன்னும் 6 மாதங்களே உள்ளன என்று அடியேனிடம் கூறினார். யாவரும் எனது உரையை ஏற்றுக் கொண்டனர்.

அதனை அடுத்து ஆலய வளாகத்தில் பொறுப்பதிகாரியினால் மரம் நாட்டி வைக்கப்பட்டது. பின்னர் ஈசுர விநாயகரின் பிரசாதங்கள் வழங்கப்பட்டு 158 ஆவது ஶ்ரீலங்கா பொலிஸ் தின விழா இனிதே நிறைவேறியது.

இதுவும் ஈசுர விநாயகரின் ஒரு திருவிளையாடல் என்பதை உணர்வோமாக.

**"பார் தெரியுது பாறாளயன் பதி பக்தர் குறை தீர்க்கும் சந்நிதி"**

16.09.2024

**சோழியூரான் பிறைசூடிக்குரு**

**(ஆன்மிக வாதியும் சந்ததிப் பூசகரும் பரம்பரைப் பரிபாலகரும்)**

(1949)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதானியின் காற்றாலை மின்திட்டத்தினை ரத்து செய்வேன்- அநுரகுமார



(கொழும்பு)

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் இந்தியாவின் அதானி நிறுவனத்தின் காற்றாலை மின்திட்டத்தினை இரத்துசெய்வேன் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் ஊழல்மிகுந்தது இலங்கையின் நலன்களிற்கு எதிராக செயற்படுகின்றது.

இலங்கை ஒரு யுனிட்டிற்கு என்ற அடிப்படையில் அதானியிடமிருந்து மின்சாரத்தினை கொள்வனவு செய்கின்றது. அதேநேரத்தில் இலங்கை நிறுவனம் என்ற அடிப்படையில் மின்சாரத்தை வழங்குகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அதானி நிறுவனத்தின் திட்டம் அளவு பெரியது என்பதை கருத்தில் கொள்ளும் போது அதன்செலவீனங்கள் குறைவாகயிருக்கவேண்டும் ஆனால் அதற்கு மாறானா நிலை காணப்படுகின்றது என தெரிவித்துள்ள அநுரகுமார திசநாயக்க, நாங்கள் இந்த ஒப்பந்தத்தை நிச்சயமாக இரத்துச்செய்வோம் என தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடபகுதியில் மன்னார் பூநகரியில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தினை அதானி கிரீன்ஸ் நிறுவனம் முன்னெடுப்பதற்கு 2023 பெப்ரவரியில் இலங்கையின் முதலீட்டு சபை அனுமதி வழங்கியது.

இதன் பின்னர் இந்த திட்டம் சட்டசவால்களை எதிர் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# வாக்களிக்க விடுமுறை வழங்கவும்- பவ்ரல்

(கொழும்பு)

தனியார் மற்றும் அரை அரச நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் வாக்களிக்க விடுமுறை அளிக்க வேண்டும் என பவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஒரு அமைப்பின் தலைவர் குறித்த சட்டத்திற்கு இணங்காமல், ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க மறுத்தால், அது பற்றி பவ்ரல் அமைப்புக்கு அறிவிக்குமாறு அவ் அமைப்பின் தலைவர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிறுவன தலைவர் சட்டத்தின் முன் குற்றவாளி எனவும், அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி இரண்டு இலட்சம் ரூபாய் அபராதமும் ஒரு மாத சிறைத் தண்டனையும் வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அவ்வாறான சம்பவங்கள் பதிவாகினால் அது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படும் எனவும் பவ்ரல் அமைப்பின் தலைவர் ரோஹன ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஐயாயிரம் ரூபாவுக்கு உரமூடை

# குறைந்த செலவில் விவசாயத்தை முன்னெடுப்போம்

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித்



(கொழும்பு)

விவசாயிகளுக்கு 50 கிலோகிராம் உரமூடை ஒன்றை 5000 ரூபாய்க்கு வழங்கி குறைந்த செலவில் விவசாயத்தை முன்னெடுத்துச் செல்ல வழியமைப்போம் என ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு நிந்தவூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் மக்கள் வெற்றி பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "நாம் அதிகாரத்திற்கு வந்த பின்னர் அனைத்து பாடசாலை களையும் சகல வசதிகள் கொண்ட பாடசாலைகளாக மாற்றுவோம்.

சர்வதேச தரத்திலான இளைஞர் மத்திய நிலையங்களை உருவாக்கி, அதனூடாக இளம் தலைமுறையினருக்கு தகவல் தொழில்நுட்பம், ஆங்கில மொழிக்கல்வி மற்றும் நவீன தொழில்நுட்ப அறிவு என்பவற்றை பெற்றுக்கொண்டு, சிறந்த தேர்ச்சியையும் ஆளுமையையும் விருத்தி செய்து கொள்வதற்கான சூழலை ஏற்படுத்தித் தருவோம்.

விவசாயத்தில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு 5000 ரூபாவுக்கு 50 கிலோகிராம் உரமூடை ஒன்றை வழங்கி, குறைந்த தொகையில், குறைந்த செலவில் விவசாயத்தை முன்னெடுத்துச் செல்ல வழியமைப்போம். இதற்கு மேலதிகமாக கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் நிவாரணத்தையும் வழங்குவோம்.

வறுமை அதிகரித்து காணப்படுகின்ற மையால் நாட்டு மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டிருக்கிறார்கள். எனவே வறுமையை ஒழிப்பதற்காக புதிய வேலைத் திட்டங்களை முன்னெடுப்போம்" என தெரிவித்துள்ளார். (நி)

# உடல்ரீதியான தண்டனைகளுக்கு தடை குற்றவியல் சட்டத்தில் அதிரடித் திருத்தம்

(கொழும்பு)

உடல் ரீதியான தண்டனைகளைத் தடை செய்வதற்கான குற்றவியல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எந்தவொரு முறையிலும் உடல் ரீதியிலான தண்டனையை தடை செய்யும் வகையில் தண்டனைச் சட்டம் திருத்தப்பட்டு அதற்கு உரிய சட்டத்தை உருவாக்குவதற்காக கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதன்படி வரைவு தயாரிப்பாளரால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதியும் கிடைத்துள்ளது.

சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் பின்னர் அதனை பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் பரிந்துரைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)






# 71 பிரதிநிதிகள் இலங்கை வருகை

(கொழும்பு)

சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளைச் சேர்ந்த 71 பிரதிநிதிகள் இலங்கை வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 43 பேரும், பொது நலவாய நாடுகளைச் சேர்ந்த 22 பேரும் தேர்தல்களுக் கான ஆசிய வலையமைப்பிலிருந்து 6 பேரும் வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அண்டை நாடுகளைச் சேர்ந்த 7 பேர் இந்த செயற்பாட்டில் மேலும் இணைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 34 ஐரோப்பிய ஒன்றிய பார்வையாளர்கள் மற்றும் 3 கூடுதல் பிரதிநிதிகள் எதிர்வரும் நாட்களில் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, 22 தேர்தல் தொகுதிகளிலும் விரிவான கண்காணிப்பை உறுதி செய்வதற்காக பார்வையாளர் குழுக்கள் தங்களது நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன என்று தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## விண்வெளியிலிருந்து வாக்களிக்கும் சுனிதா வில்லியம்ஸ்



(வோஷிங்டன்)

சர்வதேச விண்வெளி நிலையத்தில் சிக்கியுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸும் நாசா விஞ்ஞானியான பட்ச் வில்மோரும் அங்கிருந்தே அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் சுனிதா வில்லியம்ஸ், 'தேர்தலில் வாக்களிப்பது ஒவ்வொரு குடிமகனின் முக்கிய கடமையாகும். எனவே, நான் விண்வெளியில் இருந்தபடியே ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கவிருக்கிறேன்' என்றார்.

இதேவேளை பட்ச் வில்மோரும், ஜனாதிபதித் தேர்தல் வாக்குச் சீட்டுக்காக விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் போயிங் உருவாக்கியுள்ள ஸ்டார்லைனர் விண்கலம், சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பட்ச் வில்மோருடன் சர்வதேச விண்வெளி நிலையத்தை கடந்த ஜூன் 5ஆம் திகதி சென்றடைந்தது. அதுதான் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு நபர்களை ஏற்றிச் சென்ற இரண்டாவது தனியார் நிறுவன விண்வெளி ஓடம் ஆகும்.

ஒன்பது நாட்கள் அந்த நிலையத்தில் தங்கியிருந்து விட்டு ஸ்டார்லைனர் மூலமே அவர்கள் இருவரும் பூமிக்குத் திரும்புவதாக இருந்தது. இருந்தாலும், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அவர்களால் திட்டமிட்டபடி பூமி திரும்ப முடியவில்லை.

ஸ்டார்லைனரில் ஆட்களை அழைத்துவருவது அச்சுறுத்தல் நிறைந்தது என்பதால் சுனிதாவும் பட்ச் வில்மோரும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன விண்கலம் மூலம் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் பூமிக்குத் திரும்புவார்கள் என்று நாசா அறிவித்தது. யாரையும் ஏற்றாமல் ஸ்டார்லைனர் விண்கலம் மட்டும் கடந்த வாரம் பூமி திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நேருக்கு நேர் மோதிய தொடருந்துகள்

### குழந்தைகள் உட்பட மூவர் உயிரிழப்பு



(கெய்ரோ)

எகிப்தில் இரு தொடருந்துகள் நேருக்கு நேர் மோதியதில் 3பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஷர்கியா மாகாணத்தின் தலைநகரான ஜகாசிக் நகரில் இந்த விபத்து நடந்ததாக அந்நாட்டு தொடருந்து ஆணையம் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

இந்த தொடருந்து மோதலில் 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் 40 பேர் காயமடைந்துள்ளதாக எகிப்து சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற நிலையில் காயமடைந்தவர்களை தொடருந்தின் ஜன்னல்களின் வழியாக மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளதை விபத்துத் தொடர்பான காணொளியில் காணலாம். (நி)

## உலகில் முதன் முறையாக சிறுவனுக்கு பொருத்தப்பட்ட ரோபோ இதயம்



(ஜெத்தா)

சவுதி அரேபிய மருத்துவர்கள் குழு உலகிலேயே முதன்முறையாக ரோபோ இதயமொன்றினை பொருத்தியுள்ளது.

இதய நோயால் பாதிக்கப்பட்ட 16 வயது சிறுவனுக்கு இந்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இரண்டரை மணி நேரம் இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

## இஸ்ரேல் நகரம் மீது ஏவுகணை வீச்சு



(ஜெருசலேம்)

லெபனானில் இருந்து வடக்கு இஸ்ரேலில் உள்ள ஷபத் நகரம் மீது சரமாரியாக ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதை நடுவானில் இடைமறித்து இஸ்ரேல் இராணுவம் அழித்தது.

இதுகுறித்து இஸ்ரேல் இராணுவம் கூறும்போது, லெபனானில் இருந்து இஸ்ரேல் நகரம் மீது ஏவுகணைகள் வீசப்பட்டன.

முதலில் சுமார் 20 ஏவுகணை வீசப்பட்டன. 30 வினாடிகளுக்கு பிறகு 35 ஏவுகணைகள் ஏவப்பட்டன.

பல ஏவுகணைகள் நடுவானில் இடைமறிக்கப்பட்டன. சில ஏவுகணைகள் திறந்தவெளி பகுதிகளில் விழுந்தது. இதில் யாருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவித்தது. (நி)

## மியன்

❖ 74 பே

❖ 80 பே

❖ 65,00

❖ மீட்புப்



இந்த நிலையில் வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 74 பேர் பலியாகி உள்ளதாகவும் 80 இற்கும் மேற்பட்டோரை காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல

## படகு கவிழ்ந் 64 விவசா

### நைஜீரியாவி



(நைஜர்)

நைஜீரியாவில் 70 இற்கும் மேற்பட்ட விவசாயிகளை ஏற்றிச் சென்ற மரப்படகு ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வடமேற்கு நைஜீரியாவில் ஜம்பாரா மாநில விவசாயிகள் தங்களுடைய விவசாயப் பணிகளுக்காகத் தினந்தோறும் ஆற்றினைக் கடந்து சென்றுவரும் நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ன்மாரை தாக்கிய 'யாகி'!

## பர் உயிரிழப்பு
## பர் மாயம்
## 000 வீடுகள் சேதம்
## ப் பணி தீவிரம்





**(நய்பிடா)**

**யாகி புயல் மியன்மார் நாட்டைத் தாக்கியது. புயல் காரணமாக மியன்மாரில் இடைவிடாமல் கனமழை பெய்தது. இதனால் பல்வேறு இடங்களில் வெள்ளம், நிலச்சரிவுகள் ஏற்பட்டது. இதில் ஏராளமானோர் சிக்கி உயிரிழந்தனர்.**

கிராமங்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

அங்கு சிக்கியுள்ளவர்களை மீட்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டின் மத்திய பகுதிகளிலும் கிழக்கு ஷான் மாநிலத்திலும் தலை நகரான நய்பிடாவிலும் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

புயல், வெள்ளம் காரணமாக சுமார் 2.40 லட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

நாட்டின் மத்திய மற்றும் கிழக்கு பகுதிகளில் வெள்ளத்தால் 24 பாலங்கள், 375 பள்ளி கட்டடங்கள், ஒரு புத்த மடாலயம், 5 அணைகள், 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாக இராணுவம் தெரிவித்தது.

மியன்மாரில் இராணுவ ஆட்சி நடந்து வரும் நிலையில் வெள்ள மீட்பு நடவடிக்கைகளுக்கு வெளிநாடு உதவ வேண்டும் என்று இராணுவம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு மீட்பு மற்றும் நிவாரண உதவிகளைப் பெறுவதற்கு வெளிநாடுகளைத் தொடர்பு கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு இராணுவம் அறிவுறுத்தி உள்ளது. (நி-6)

## ழ்ந்து விபத்து
## ாயிகள் பலி
### வில் சோகம்



யில் 70 பேர் படகில் சென்ற போது திடீரென ஆற்றில் கவிழ்ந்துள்ளது.

இதில் விவசாயிகள் 64 பேர் நீரில் மூழ்கிப் பரிதாபமாக உயிரிழந்துள்ளதுடன் 6 பேர் பத்திர மாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து அந்நாட்டில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பங்களாதேஷில் திடீர் நிலச்சரிவு
## 6 பேர் பரிதாபப் பலி

(டாக்கா)

வங்க தேசத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில் டாக்காவில் இருந்து தென்கிழக்கே 392 கி.மீ. தொலைவில் உள்ள காக்ஸ் பஜார் மாவட்டத்தில் உள்ள அகதிகள் முகாமில் கடந்த வியாழக் கிழமை திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது.

ரோஹிங்கியா அகதிகள் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள ஹதிகும்ருல்-14 ரோஹிங்கியா முகாமில் ஏற்பட்ட நிலச்சரிவால் ரோஹிங்கியா குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். பல குடியிருப்புகள் சேதமடைந்தன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிலச்சரிவை தொடர்ந்து ஆபத்தான மலைச் சரிவுகளில் வசித்து வருபவர்களை வெளியேற்றும் பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டனர். (நி)



## ரஷ்யா-உக்ரைன் இடையே
## கைதிகள் பரிமாற்றம்



(மொஸ்கோ)

ரஷ்யா-உக்ரைன் இடையே 2 ஆண்டுகளுக்கு மேலாக போர் நீடித்து வருகிறது. இதில் உக்ரைனின் சில பகுதிகளை ரஷ்யப் படைகள் கைப்பற்றியது.

இதற்கிடையே ரஷ்யா-உக்ரைன் இடையே கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பேச்சுவார்த்தை நடத்தியது. இந்த நிலையில் ரஷ்யா-உக்ரைன் தலா 103 கைதிகளை பரிமாற்றம் செய்து கொண்டனர்.

2022 ஆம் ஆண்டு கிழக்கு உக்ரைனில் உள்ள அசோவ்ஸ்டல் எக்கு ஆலையைக் கைப்பற்றியபோது பிடிபட்ட உக்ரைன் வீரர்கள் மற்றும் குர்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைன் இராணுவத்தினர் ஊடுருவிய போது பிடிபட்ட வீரர்களை ரஷ்யா விடுவித்தது. அதேபோல் குர்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைனில் சிக்கிய ரஷ்ய வீரர்கள் விடுவிக்கப்பட்டனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியான முறையில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை

(கொழும்பு)

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை அமை தியான முறையில் இன்று காலை ஆரம்பமானதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சை தொடர்பான எந்தவித முறைகேடுகளும் பதிவாகவில்லை எனவும், திட்டமிட்டவாறு தடங்க லின்றி உரிய நேரத்தில் சகல பரீட்சை நிலை யங்களிலும் பரீட்சை ஆரம் பிக்கப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

ஏதுவான காலநிலை நிலவியமையினால், சகல மாணவர்களும் எவ்வித சிக்கலுமின்றி பரீட்சை எழுதியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2,849 பரீட்சை நிலை யங்களில் இன்றைய தினம் காலை 9.30இற்கு ஆரம்பமான தரம் 5 புல மைப்பரிசில் பரீட்சை பிற்பகல் 12.15 வரை நடை பெற்றது.

குறித்த பரீட்சைக்கு இம் முறை 3,20,879 மாண வர்கள் தோற் றியிருந்த தாகப் பரீட்சைகள் திணைக் களம் அறிவித்துள் ளது. (நி)

# தேர்தல் பிரசாரங்கள் நிறைவுற்றதும் முடங்கவுள்ள சமூக வலைத்தளங்கள்

## தேர்தல்கள் ஆணைக்குழு திட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பிரசா ரங்கள் முடிவடைந்த பின்னர் 48 மணித்தியாலங்கள் அமை தியான காலப்பகுதியில் வேட் பாளர் பிரசாரம் மற்றும் சமூக ஊடகங்களில் சேறு பூசுவதை நிறுத்துவதற்கான விரிவான வேலைத்திட்டத்தை நடை முறைப்படுத்த தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள் ளது.

தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணைக்குழு மற்றும் சமூக ஊடக வலையமைப்பைச் சேர்ந்த நிறுவனங்களுடன் இணைந்து இந்தத் திட்டத்தை தயாரிப்பதில் கவனம் செலுத்தி யுள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் நாளை மறுதினம் புதன்கிழமை 18 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைவதோடு 19ஆம் மற்றும் 20ஆம் திகதிகளில் அமைதியான கால கட்டமாக இருக்கும்.

இந்தக் காலப்பகுதியில் பிர சாரம் செய்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ள போதி லும் சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரசாரம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகத் தகவல் கள் வெளியாகியுள்ளன.

சமூக ஊடக குழுக்களுடன் கலந்தாலோசித்த பின்னர் மௌன காலத்தில் தேர்தல் பிரசாரம் மற்றும் அவதூறு பரப்புரைகளை நிறுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீவிர முயற்சிகளை மேற் கொள்ளும் என ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்த பிரச்சாரங்களில் பெரும்பாலானவை வெளிநாடு களில் இருந்து செய்யப்படுவதா கவும் அவர் குறிப்பிடுகிறார்.

அந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி சமூக ஊட கங் களில் வெளியிடப்பட்ட அவதூறு பிரசாரங்கள் போன்றவற்றை நீக்குவதற்கு தேர்தல்கள் ஆை ணக்குழு நடவடிக்கை எடுத் துள்ளதாகவும் தலைவர் குறிப் பிட்டார். அமைதியான காலத் தில் சமூக வலைத்தளங் களில் மேற்கொள் ளப்படும் தேர்தல் பிரசார நட வடிக் கை களை தடுக்கும் வகையில் தேர்தல் ஆணையம் அமைப்பு ஒன்றை தயாரித்து வரு வதாக வும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# திலீபனின் நினைவிடத்தில் அரியநேத்திரன் அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரன், தியாக தீபம் திலீபனுக்கு நல்லூரில் உள்ள நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்.

தியாக தீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந் தல் நேற்றுமுன்தினம் ஞாயிற் றுக் கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் தமிழ்ப்பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் நல்லூரில் உள்ள நினைவு தூபியில் வைக்கப்பட்டுள்ள தியாக தீபத்தின் திருவு ருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்படிருந் தது. (6-33)

# வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவந்தனில் இன்று திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறும்.

இதன்போது வல்லிபுர ஆழ்வார் தேரில் ஆரோ கணித்து அருள் பாலிக் கவுள்ளார்.

நாளை செவ்வாய்க் கிழமை மாலை 5 மணிக்கு சமுத்திரத்தீர்த்தத் திருவிழாவும் நாளை மறுதினம் கேணித் தீர்த் தமும் அன்று மாலை கொடியிறக்க உற்சவமும் இடம் பெறவுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)



தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தீர்த்தத் திருவிழா நேற்று துர்க்கா புஷ்கரணி தீர்த்தக் கேணியில் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:சிவசாந்தன்)

# களமிறக்கப்படும் அதிரடிப்படையினர்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் தினத் தன்றும் முடிவுகள் அறிவிக் கப்படும் போதும் நாட்டில் ஏற் படக்கூடிய அவசர நிலை மையை எதிர்கொள்வதற்காக பொலிஸ் மற்றும் ஆயுதப் படைகளை ஒருங்கிணைத்து "அவசரகாலத் திட்டத்தை" தயா ரிப்பதற்கு ஜனாதிபதி பாதுகாப் புத் தலைவர்களுக்கு அதி காரம் வழங்கியுள்ளார்.

அவசரகால நிலை ஏற்படக் கூடும் என பாதுகாப்பு சபை கூட்டத்தின் போது பாதுகாப்பு பிரதானிகள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியமையே இதற் கான காரணமாகும் என தெரி விக்கப்படுகின்றது.

இதன்படி அவசர நிலை யில் பொலிஸாருக்கு உதவி யாக இராணுவத்தை களமிறக் குவது மற்றும் இராணு வம் தனது அதிகாரங்களை அவசர காலத்தில் எவ்வாறு பயன்படுத்துவது என் பது தொடர்பில் சட்டமா அதி பரிடம் ஆலோசனை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் நாயகத்துடனும் கலந்துரையாடல் நடத்தப்பட் டுள்ளது.

பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் கீழ் முப்படை தள பதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர்கள் தலைமையில் அவ சரகால பாதுகாப்புத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

அதற்கான. விசேட கலந்து ரையாடல் நாளை மறுதினம் 18 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன, பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குண திலக்க, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந் திர சில்வா, முப்படைகளின் தளபதிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன் பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவதற்காக ஜனாதிபதி யின் தலைமையில் தேர்த லுக்கு முன்னர் அவசர பாது காப்புச் சபைக் கூட்டமும் நடத் தப்பட உள்ளது. (நி)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம் )

உரும்பிராய் ஞான வைரவர் கோவிலடி சனசமூக நிலையம் நடத் தும் முழுநிலா நாள் கருத் தரங்கானது நாளை செவ் வாய்க்கிழமை பிற்பகல் 4.30மணியளவில் சன சமூக நிலைய மேல் மண் டபத்தில் தலைவர் இரா. ஜெயக்குமார் தலை மையில் நடைபெற வுள்ளது.

இதில் சமூக மாற்றத் திற்கான செயற்பாட்டாளர் ம. செல்வின் கருத்து ரை யைத் தொடர்ந்து "சமூ கங்களை கட்டியெழுப்புதல்" எனும் தலைப்பில் கலந் துரையாடல் இடம்பெறும். (நி-6)

# புதிய ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட தயார்

## அமெரிக்கா தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை மக்கள் தெரிவு செய்யும் ஜனாதிப தியுடன் இணைந்து செயற் பட எதிர்பார்ப்பதாக அமெ ரிக்கா தெரிவித்துள்ளது.

X பதிவின் ஊடாக இலங் கைக்கான அமெரிக்க தூது வர் ஜூலிசங் இதனை தெரிவித்தார்.

சுதந்திரமானதும் நியா யமானதுமான தேர்தலை நடத்துவது இலங்கையின் ஜனநாயகத்திற்காக ஆற் றப்பட வேண்டிய முக்கிய கடமை என அவர் தெரி வித்துள்ளார். (நி)

# மோ. சைக்கிள்கள் விபத்து இருவர் மருத்துவமனையில்

## புதுக்குடியிருப்பில் சம்பவம்

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பில் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்து சம்பவம் ஒன்று நேற்றுக் காலை இடம்பெற்றது. முல் லைத்தீவு புதுக்குடியிருப்பில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிளும் ஒன்றை ஒன்று முந்தி செல்ல முற்பட்ட போது இவ் விபத்து சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் மோட் டார் சைக்கிளை செலுத்தி சென்ற இருவரும் காயங் களுக்குள்ளாகிய நிலையில் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் அனும திக்கப்பட்டுள்ளனர். விபத்து சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை புதுக்கு டியிருப்பு பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 45 வயது மதிக்க தக்க பெண், சிவநகரை சேர்ந்த இளைஞன் 25 வயது மதிக்கத்தக்க இளைஞனுமே காயங்களுக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-299)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முல்லையில் இடம்பெற்ற மாட்டுவண்டி சவாரி போட்டிகள்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட கரும்புள்ளியான் கண்ணகியம்மன் சவாரி திடலில் நேற்று முன்தினம் பிற்பகல் மாட்டுவண்டி சவாரி போட்டிகள் நடைபெற்றுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் கடந்த பல ஆண்டுகளாக செயலிழந்து காணப்பட்ட சவாரித்திடல் புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டு குறித்த சவாரித் திடலில் மாட்டு வண்டி சவாரி போட்டிகள் நடைபெற்றுள்ளன.

இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 80 இற்கும் மேற்பட்ட காளைகள் அ.ஆ.இ.ஈ பிரிவுகளில் போட்டிகளில் பங்குபற்றியிருந்தன.

இதன் போது போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. (6-315)

# வத்திராயன் பகுதியில் 95 கிலோ கஞ்சா மீட்பு

## பெண் ஒருவர் கைது

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட வத்திராயன் பகுதியில் உள்ள வீடொன்றில் மறைத்து வைத்திருக்கப்பட்டிருந்த 95 கிலோ 520 கிராம் நிறையுடைய கேரள கஞ்சாவும் கஞ்சா பொதியுடன் அப் பகுதியில் தரித்து நிறுத்தப்பட்டிருந்த கப்ரக வாகனம் ஒன்றையும் பெண் ஒருவரையும் சந்தேகத்தின் பேரில் சிறப்பு அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

சிறப்பு அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய குறித்த கைது நடவடிக்கை நேற்று இடம்பெற்றிருந்தது.

சந்தேக நபர் மற்றும் தடயப் பொருட்கள் சிறப்பு அதிரடிப்படையினரால் பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (6-316-100)

# மீலாத் விழா

(யாழ்ப்பாணம்)

ஹிஜ்ரி 1446 ரபிஉல் அவ் வல் பிறை 12 இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு யாழில் "மீலாத் விழா" மாணவச் செல்வங்களின் கிராஅத், இஸ்லாமிய கீதங்கள், கஷீதா, பேச்சு, கவிதைகள் போன்ற நிகழ்வுகளோடு கண்ணியமிக்க உலமாக்களின் சொற்பொழிவும் மாணவர்கள் மத்தியில் அறிவுக் களஞ்சியமும் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து எழுச்சிப் பொதுக் கூட்டமானது இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (6)

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# இலந்தைப்பழம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name- Zizyphus Jujuba**
**family- Rhamnaceae**

வளமில்லாத நிலங்களில் பரம்பிக் காணப்படும் மரம் நட்டு சரியான பராமரிப்பாக இருந்தால் இரண்டாவது ஆண்டிலேயே பழங்கள் கிடைக்கும்.

பல கிளைகளுடன் 6 மீற்றர் உயரம் வரை வளரக் கூடியது. பழங்கள் முதலில் மஞ்சள் நிறமாகவும் பின்செம் மஞ்சள் நிறமாகவும் இறுதியில் சிவப்பு கலந்த மண்ணிறமும் காணப்படும்.

ஒரு வித்து பழத்தின் சதையால் மூடப்பட்டு இருக்கும். ஆனால் இங்கு மருத்துவப் பண்புகள் நிறைந்த இப்பழங்களின் பாவனை மிகவும் குறைந்து வருவதால் இப் பழ மரங்களின் பரம்பலும் அழிந்து போகும் அபாய நிலையில் காணப்படுகின்றது.

இப் பழங்கள் எம் நாட்டின் தட்ப வெப்ப நிலைக்கு மிகவும் உகந்த பழங்களாகும். இலந்தைப் பழங்களை சாப்பிட்டு வர உடலிற்கு குளிர்ச்சியும் உரத்தையும் கொடுக்கும், இரத்தத்தையும் சுத்திகரிக்கக் கூடியது.

மலத்தை இழக்கி வெளியேற்றக் கூடியது. புழுக்கள் இல்லாத சுத்தமான பழங்களை விதைகளை நீக்கி பிசைந்து போதியளவு உப்பு மிளகாய்த்தூள் கூட்டி அடை தட்டி காயவைத்து உபயோகித்து வந்தால் வாந்தி, பித்தவாந்தி, பசி மந்தம்,சலக்கட்டு நீங்கி, நல்ல பசி தீவனம் உண்டாகும்.

**நூறு கிராம் பழத்திலுள்ள சத்துக்கள்**

ஈரலிப்பு-0.8 கிராம்
கொழுப்பு 0.3 கிராம்
காபோவைதரேற்று-17கிராம்
கல்சியம் 4 மி. கிராம்
இரும்பு -1.8 மி.கிராம்
பொஸ்பரஸ்-9.மி.கிராம்
Bகரோட்டீன்- மை.கிராம்
விற்றமின் "C"-76மி.கிராம்

ஈரானில் மேற் கொள்ளப் பட்ட ஆய்வில் நாலாயிரம் வருடங்களாக இந்தியாவிலும் இலங்கையிலும் பாவிக்கப்பட்டு வந்த இந்த இலந்தைப் பழங்களின் சாறிற்கு புற்று நோய்க் கலங்களை இறக்க வைக்கும் ஆற்றல் உள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.



எனவே இப் இப்பழங்கள் கிடைக்கும். தாராளமாகச் சாப்பிடலாம். சித்தமருத்துவத்தில் இதன் செய்யுளில் பித்தம், இரத்தம் சம்பந்தப்பட்ட நோய்களைத் தீர்க்கும் குணங்கள் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சீனா நாட்டின் இலந்தைப் பழத்தின் சாறிற்கு Ticket for Sleep என்று கூறி நித்திரை இன்மைக்கு இரவில் சாப்பாட்டின் பின்பு 150-200 மில்லி இலந்தைப்பழச்சாறு அருந்திவர நன்றாகத் தூக்கம் உண்டாகும்.

அதே நேரம் மன அழுத்தத்தை குறைக்கக் கூடிய சாத்வீக குணம் நிறைந்தது இலந்தைப் பழங்களாகும்.

இப்பழங்களை சாப்பிட்டுவர மனச் சோர்வு, மன அழுத்தம், மனதில் ஏற்படும் பயப்பீதிகள், புற்றுநோய் போன்றவற்றிக்கு உபயோகிக்கக் கூடியது. Jujubi என அழைக்கப்படும்.

நம்முடைய பிரதேச இலந்தைப் பழங்களில் அமெரிக்காவும் நிறைய ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. இதனாலேயே சொக்லேற் போன்று இதன் பழங்களை தயாரிக்கின்றார்கள்.

அதனால் எம்மவர்கள் இப் பழங்களை கண்டு கொள்வதில்லை. இப்பழங்களின் பாவனை பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே அதிகம் தேவைப்படுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடியது. இதற்கு இலந்தைப்பழங்களிலிருந்து அடை தயாரிக்கலாம். இதனால் இரத்த சோகையும் தீரும். இதற்கு இலந்தைப் பழங்களை தெரிவு செய்து, அதனுடன் பெருஞ்சீரகம், செத்தல் மிளகாய், சீனி அல்லது பனை வெல்லம் சேர்த்து நன்றாக பிசைந்து அடையாகத் தட்டி வெயிலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

இதை அடிக்கடி சாப்பிடலாம். இதில் உயிர்ச்சத்து C அதிகளவில் காணப்படும். இலந்தைப் பழங்கள் அதிகளவு கிடைக்கும்போது சேகரித்து விதை நீக்கி பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும். அந்தப் பொடியில் ஒரு தேக்கரண்டி எடுத்து, குத்தரிசிக் கஞ்சியில் கலந்து சாப்பிட்டால் அஜீரணம் நீங்கி நன்றாக பசி எடுக்கும்.

பல தாது உப்புக்கள் நிறைந்த இப்பழங்களை சாப்பிட்டு வர நினைவாற்றல் அதிகரிக்கும். இலந்தைப் பழங்கள் 100 கிராம் அளவு சேகரித்து குடிநீர் போல தயார் செய்து அரைவாசியாக சுண்டக் காய்ச்சி தினசரி குடித்துவர மூளைப்பதற்றம், ஞபாக மறதி, மன அழுத்தம், மனப் பலவீனம் போன்றவை குணமாகும். மேலும் இதைத் தொடர்ந்து எடுத்துவர உடலிலுள்ள நச்சுக்கள் வெளியேறும். சீமை இலந்தைப் பழம் என அழைக்கப்படும் வேறு சிற்றினப் பழமும் உண்டு. அதன் மருத்து வக் குணங்கள் பற்றி இன்னொரு வாரம் ஒரு மூலிகையில் பார்ப்போம். ஆனால் இரண்டு பழங்களும் வேறு வேறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர்

581





பாண்டிமாதேவி அந்தப் பாலகரைப் பார்த்து, "ஐயோ! இந்த இளம் பிள்ளை எங்கே? பிரம்ம ராட்சதர்கள் போன்ற சமணர்கள் எங்கே? இந்தப் பிள்ளை அவர்களுடன் எப்படி வாதுப்போரிட்டு வெல்ல முடியும்?" என்று கவலையுறுகிறார். அதையறிந்த சம்பந்தர் பாண்டிமாதேவியைப் பார்த்துச் சொல்லுகிறார்.

"மானினேர் விழி மாதராய் வழுதிக்கு
மாபெருந்தேவி கேள்!
பாலல்வாயொரு பாலன் ஈங்கிவன்
என்று நீ பரிவெய்திடேல்!
ஆனை மாமலை யாதியாய
இடங்களிற் பல அல்லல்சேர்
ஈனர்கட் கெளியேன் அலேன்திரு
ஆலவாயரன் நிற்கவே!

என்ற பதிகத்தைத் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி பாடிய போது செம்பியன் மாதேவி தம்மையே மங்கையர்க்கரசியாகவும், பதிகம் பாடிய நம்பியையே ஞான சம்பந்தராகவும் பாவனை செய்து கொண்டு இந்த உலக நினைவையே மறந்து மனம் பூரித்தார்.

மதுராந்தகத் தேவரோ, "ஆம் நான் இளம் பிராயத்துச் சிறுபிள்ளைதான்! ஆனால் திருக்கோவலூர் மலையமானுக்கும், கொடும்பாளூர் பூதி விக்கிரம கேசரிக்கும், அவர்களுடைய ஆதரவைப் பெற்ற சுந்தர சோழரின் புதல்வர்களுக்கும் அஞ்சி விடமாட்டேன். சம்பந்தருக்கு ஆலவாயரன் அருள் இருந்தது போல் எனக்கும் பழுவேட்டரையர் உதவி இருந்தது!" என்று எண்ணிக் கொண்டார்.

வந்தியத்தேவனுடைய செவிகளில் பாடல் ஒன்றும் புகவேயில்லை. அவனுடைய கண்களும் கருத்தும் குந்தவை தேவியிடமே முழுவதும் ஈடுபட்டிருந்தன. இளைய பிராட்டி ஒருகால் தன்னைத் தெரிந்து கொள்ளவேயில்லையா, தெரிந்து கொண்டும் பாராமுகமா, அல்லது தன்னிடம் ஒப்புவித்த காரியத்தை நிறைவேற்றி விட்டு வந்து உடனே சொல்லவில்லை என்ற கோபமா? என்று இப்படி அவன் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது.

அத்துடன் இளையபிராட்டியைத் தனிமையில் எப்படிச் சந்திப்பது, சந்தித்துச் செய்தியை எப்படிச் சொல்லுவது என்றும் அவன் யோசனை செய்து கொண்டிருந்தான்.

பாடல்கள் முடிவடைந்ததும் செம்பியன் மாதேவி நம்பியாண்டாருடன் வந்திருந்த பெரியவரைப் பார்த்து, "ஐயா இந்த இளம்பிள்ளையைப் பார்த்தால் ஞானசம்பந்தரே மீண்டும் வந்து அவதரித்திருப்பது போலத் தோன்றுகிறது. இவரை அழைத்துக் கொண்டு தமிழகமெங்கும் ஊர் ஊராகச் செல்லுங்கள். அங்கங்கே கிடைக்கும் தெய்வீகமான தேவாரப் பதிகங்களைச் சேகரித்துக் கொண்டு வாருங்கள். அப்பர் பதிகங்களையும், சம்பந்தர் பதிகங்களையும், சுந்தரமூர்த்தியின் பாடல்களையும் தனித்தனியாகத் தொகுக்க வேண்டும். சிவாலயங்கள் எல்லாவற்றிலும் தினந்தோறும் பாடச் செய்ய வேண்டும். இது என் கணவருடைய விருப்பம். அதை என் வாழ்நாளில் நிறைவேற்றிப் பார்க்க ஆசைப்படுகிறேன்.

நீங்கள் ஊர் ஊராய்ப் போவதற்கு வேண்டிய சிவிகைகள், ஆட்கள், பரிவார சாதனங்கள், எல்லாம் அளிப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். சக்கரவர்த்தியின் அனுமதியைக் கோரி என் குமாரனிடமே செய்தி சொல்லி அனுப்புகிறேன்!" என்றார். அச்சபையில் அப்போது எழுந்த கோலாகலமான கோஷங்கள் மதுராந்தகரின் செவிகளுக்கு நாராசமாயிருந்தன.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## நாட்டு மக்களை வாழ வைத்தவன்

மலையப்பிரபன் என்ற அரசன், ஒரு நாட்டை ஆட்சி செய்து கொண்டிருந்தான்.

தொடர்ந்து அந்த நாட்டில் மழை பெய்யாததால் பஞ்சம் உண்டாயிற்று. மக்கள் பட்டினியால் வாடி உயிர் இழந்தனர். கால் நடைகளுக்கு தண்ணீரும் இல்லை தீவனங்களும் இல்லாமையால் அவை செத்துப்போயின.

குடிமக்களின் துயரத்தைக் கண்டு மனம் சகியாமல் அரசன் இரக்கம் கொண்டு பக்கத்து நாடுகளிலிருந்து தேவையான உணவுப் பொருட்களை வரவழைத்து நாட்டு மக்களின் துன்பத்தைப் போக்க முயன்றான்.

ஆனால், சுயநலமிக்க சுரண்டல்காரர்களான அமைச்சர்கள், அரசனின் நல்ல நோக்கம் நிறைவேறவிடாமல் சூழ்ச்சி செய்தனர்.

இளவரசனான இந்திர பிரபன் நாட்டுமக்களின் துன்பத்தையும், அமைச்சர்களின் போக்கையும் அறிந்து வேதனை அடைந்தான்.

தந்தையிடம் சென்று, அமைச்சர்களின் தீய யோசனைகளைக் கேட்டு, குடிமக்களை அழிய விடுவதுதான் ஆட்சி முறையா? மக்களின் தேவையை நிறைவேற்றக் கூடிய கற்பக விருட்சம் போன்றவர் அல்லவா அரசர்" என்று வாதாடினான் இளவரசன்.

அமைச்சர்களின் கைப்பொம்மையாகிவிட்ட அரசன் மகனின் போக்கைச் சிறிதும் விரும்பாமல், "மக்களின் தேவைகளை நிறைவேற்ற நான் குபேரன் அல்ல! உனக்கு ஆற்றல் இருந்தால், நீயே அதைச் செய்யலாமே?" என்று கண்டிப்பாகக் கூறினான்.

தந்தையின் பிடிவாதத்தைக் கேட்டு வருந்திய இளவரசன், "விரும்பியதை எல்லாம் அளிக்கக் கூடிய கற்பகத்தருவாக இருக்கவேண்டும் அல்லது அந்த முயற்சியில் ஈடுபட்டு உயிரை விடவேண்டும்" என்ற உறுதியோடு, மலைப் பகுதிக்குச் சென்று கடுமையான தவத்தை மேற்கொண்டான்.

அவனுடைய தியாக உள்ளத்தையும், உறுதியையும் அறிந்த இந்திரன் கருணை காட்டி, அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றினான்.

மக்களை வாட்டிய பஞ்சம் நீங்கியது. நாட்டில் மழை பொழிந்தது, மக்கள் செழிப்புடன் வாழலானார்கள்.

இப்படி இருக்கும்போது, இளவரசன் இந்திரபிரபன் முன், இந்திரன் தோன்றி, "இந்த நாட்டில் உன்னிடமிருந்து உதவி கேட்டுப் பெற எவருமே இல்லை. ஆகையால், நீ சுவர்க்க லோகத்துக்கு வந்து வாழ்வாயாக" என்று அழைத்தான். இந்திரனின் அழைப்பை ஏற்காமல், "என் நலனை மட்டும் பெரிதாகக் கருதி, நான் மட்டும் எப்படி வருவேன்? என் குடிமக்களுடன் வாழ்வதே எனக்கு சுவர்க்க லோகம்" என்று மறுத்து விட்டான். இளவரசன்.

அவனுடைய பரந்த நோக்கத்தையும், தியாக உள்ளத்தையும் பாராட்டி, "உன் நாட்டு மக்கள் அனைவரும் சுவர்க்க பூமிக்கு வந்து சேரலாம்" அவர்களை உன் விருப்பம் போல் அழைத்துச் செல்லலாம். என்று பெருந்தன்மையோடு கூறினான் இந்திரன்.

ஆனால், எதிர்காலத் தலைமுறையினருக்கு உதவ நான் இங்கு இருக்க வேண்டும்" என்றான் இளவரசன்.

அவனுடைய புகழ் எங்கும் பரவியது. மக்கள் போற்றினர். இக்கதையில் தியாகம், பரந்த நோக்கம், சுயநலமின்மையே மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தின் உணர்வுகள் உண்மையாக இருப்பின்
மனதின் எண்ணங்களும் சரியாகவே இருக்கும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனவாத வேரைப் பிடுங்காமல் நாட்டை யாராலும் காப்பாற்ற முடியாது!

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ள முதன்மை வேட்பாளர்களின் பிரசாரங்களைக் கேட்கும் போதெல்லாம் அட! இவர்கள் எங்கிருந்து வந்து குதித்தார்கள் என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு அவர்கள் கூறுகின்ற விடயங்கள் உள்ளன.

ஆம், நான் ஜனாதிபதியாக வந்தால், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன், மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவேன், பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பை உயர்த்துவேன் என ஏகப்பட்ட விடயங்கள் அடுக்கப்பட்டுள்ளன.

இதைப் பார்க்கும்போது, ஏதோ இது இலங்கையில் நடக்கின்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தல் போலவும் ஜனாதிபதி ஒருவர் இந்த நாட்டில் இல்லாததுதான் மிகப்பெரிய குறைபாடு போலவும் நிலைமை உள்ளது.

தவிர, எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தல் மூலம் புதிய ஜனாதிபதியாகத் தாம் தெரிவு செய்யப்பட்டால், இலங்கை இந்திரலோகம் போல ஆக்கப்படும் என்பதாகவும் தேர்தல் பிரசாரங்கள் அமைந்துள்ளன.

இதுதவிர, தேர்தலை ஒட்டி வெளியிடப்படுகின்ற தேர்தல் விஞ்ஞாபனங்கள் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ.

அடேங்கப்பா! இந்த உலகில் மிக உச்சமான நாடாக இலங்கையை மாற்றுவதுபோல அத்தனை வேட்பாளர்களதும் தேர்தல் விஞ்ஞாபனத்தின் முன்மொழிவுகள் காணப்படுகின்றன.

ஆம், எங்கெல்லாம் திருத்தம் செய்யப்பட வேண்டுமோ அந்தத் துறைகளெல்லாம் பிரித்து வேயப்பட்டுள்ளன.

உண்மையைச் சொல்லப்போனால், தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிப்பதில் நம் நாட்டு அரசியல் கட்சிகள் அதிசிறப்புத்தகைமை பெற்றுள்ளன என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

இங்குதான் பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை என்பதன் பொருள் உணரப்படுகிறது.

ஆம், இலங்கை நாடு கந்தறுந்து கிடக்கிறது.

உலக நாடுகள் அனைத்திடமும் பிச்சை பெற்றாயிற்று.

இப்போது சர்வதேச நாணய நிதியத்தின் தயவில் இலங்கையின் சீவியம் நடக்கிறது.

எனினும் இத்தகையதொரு நிலைமை ஏன் வந்துற்றது என்பது பற்றி எவருமே பேசுவதாக இல்லை.

உண்மையைச் சொல்லப்போனால், 30 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு எதிராக இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் நடத்திய கொடும் போரின் விளைவாகவே இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்து போனது.

இதற்கும் மேலாக, கல்வியையும் கடின உழைப்பையும் தமது மூலதனமாகக் கொண்ட தமிழ் மக்களைத் திட்டமிட்டு வஞ்சித்ததன் காரணமாக, இலங்கையின் செல்வம் அத்தனையும் தேய்ந்து போயிற்று.

இந்நிலையில் இலங்கையின் பெரும்துயரமாக இருக்கின்ற இனவாதம் வேரறுக்கப்பட வேண்டும்.

அதை வேரறுக்காமல், எந்த ஜனாதிபதியாலும் நாட்டை மீட்டெடுக்க முடியாது.

இதுவே உண்மை. இதுவே சத்தியம். ஆனாலும் அதனைக் கூறுவதற்கு எந்தச் சிங்கள ஜனாதிபதி வேட்பாளரும் தயாரில்லை என்பதுதான் உண்மை.

# நாவலர் கலாசார மண்டபத்தை வாக்குச் சாவடியாக்க வேண்டாம்

## தேர்தல் ஆணையாளருக்கு நாவலர் சபை கடிதம்

ஆறுமுகநாவலர் கலாசார மண்டபத்தை வாக்குச்சாவடியாகப் பயன்படுத்துவது அதன் புனிதத்தன்மையையும் நடைமுறைகளையும் பாதிக்கக்கூடும் என்பதால் அம் மண்டபத்தை வாக்குச் சாவடியாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் மற்றும் செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ.எல்.ரத்நாயக்கவிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் சின்னத்துரை தனபாலா மற்றும் செயலாளர் கலாநிதி கி.பிரதாபன் ஆகியோரால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில்,

இலங்கையின், தேசிய வீரர்களுள் ஒருவராகப் போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிறந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கலாசார மண்டபம் ஆறுமுகநாவலர் பெருமானை என்றும் நினைவில் கொள்ளும் வகையில் ஓர் ஆன்மீக மையமாக, அவர்தம் கொள்கைகளைப் பேணும் நினைவாலயமாக விளங்குவதன் பொருட்டுமாகும்.

நாவலர் கலாசார மண்டபம் என்ற பெயரைக் கொண்டிருந்தாலும் சைவ சமய ஆசார அனுட்டானங்களைப் பேணும் ஆன்மீக நிலையமே இக் கலாசார மண்டபமாகும்.

எனவே அதன் புனிதத்தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு, தயவு செய்து இந்த மண்டபத்தை வாக்குச்சாவடியாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். என்று அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ந-7)

## வேட்பாளருக்கு ஆதரவாக வாக்காளர்களுக்கு பணம் மூதூரில் ஒருவர் கைது

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை விளம்பரப்படுத்தும் நோக்கில் பண விநியோகத்தில் ஈடுபட்ட நபர் ஒருவரை மூதூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிண்ணியாப் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தனது வீட்டைச் சுற்றி வசிப்பவர்களுக்கு தலா 5000 ரூபா பணத்தை வழங்கியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூர் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் வாக்காளர்களுக்கு பணம் வழங்கிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் எதிர்காலத்தில் அரசியலில் பிரவேசிக்கும் நோக்கில் சம்பந்தப்பட்ட ஜனாதிபதி வேட்பாளரை முன்னிலைப்படுத்தவே இவ்வாறு செய்துள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (ந-7)

## யாழ்ப்பாணம் அலுவலகம் இன்று திறந்து வைப்பு

*(யாழ்ப்பாணம்)*

அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு தனது யாழ்ப்பாண அலுவலகத்தை இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் திறந்து வைக்கவுள்ளது.

குறித்த அலுவலகம் இல.90, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ளது. (ந-7)

## சட்டத்தரணிகள் சங்கத்திற்கு பதில் தலைவர் நியமனம்

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன பதவி விலகியதை அடுத்து அந்த சங்கத்தின் பதில் தலைவராக அனுர மத்தேகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜப்பான் ஜய்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆலோசனை சேவைத் திட்டம் தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன நம்பிக்கை மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து,

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவியிலிருந்து ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன கடந்த 13 ஆம் திகதி பதவி விலகியமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## அரசகேசரிப்பிள்ளையாருக்கு இன்று இரதோற்சவம்

*(யாழ்ப்பாணம்)*

சரித்திரப் பிரசித்தி பெற்ற நீர்வையம்பதி அரசகேசரிப்பிள்ளையார் ஆலய வருடாந்த பிரம்மோற்சவந்தனில் இரதோற்சவப் பெருவிழா இன்று இடம்பெறவுள்ளது.

இன்று காலை 6.30 மணியளவில் வசந்த மண்டபப்பூஜையிடம் பெற்றதைத்தொடர்ந்து காலை 10 மணியளவில் பஞ்சமுக விநாயகப்பெருமான் சித்திரத் தேரில் ஆரோகணித்து அருள் பாலிக்கவுள்ளார். (ந-7)

## கசிப்புடன் இருவர் கோப்பாபிலவில் கைது

*(முள்ளியவளை)*

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாபிலவு பகுதியில் கசிப்புடன் இருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் முள்ளியவளைப்பிரதேசத்தை சேர்ந்த 26 மற்றும் 32 வயதுடையவர்கள் ஆவர்.

இவர்களிடமிருந்து 200 லீற்றர் கசிப்பு, மதுபானம் வடிப்பதற்கு பயன்படுத்தப்படும் கோடா மற்றும் 08 செப்புச் சுருள்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (ந-7)

## இலங்கை செல்வோருக்கு அமெரிக்கா எச்சரிக்கை

*(கொழும்பு)*

இலங்கை செல்லும் தமது நாட்டுப் பிரஜைகளுக்கு அமெரிக்கா பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் போது அவதானத்துடன் செயற்படுமாறு வேண்டுகோள் விடுத்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மக்கள் அதிகம் கூடும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 18ஆம் திகதியுடன் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் நிறைவடையவுள்ளன.

19, 20ஆம் திகதிகளில் நாட்டில் அமைதி நிலைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும் ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

13

2. சமுதாயச் சபைகள் (Community Councils).
3.பிரதேச சபைகள் (Regional Councils)

இந்த மூன்று சட்டவாக்க நிறுவனங்களிடையே ஏற்றத்தாழ்வு இல்லை. மூன்றும் சமதையான நிலையில் கணிக்கப்படுகின்றன. 1933ஆம் ஆண்டின் யாப்புத் திருத்தம் சமஷ்டி அரசின் அதிகாரங்களை நிரலிட்ட பின்னர் எஞ்சிய அதிகாரங்கள் பிரதேசங்களுக்கு உரியவை (உறுப்புரை 35) எனக் கூறுகிறது. இந்த மூன்று சட்டவாக்க நிறுவனங்களும் அளவில் வேறுபட்டவை ஆயினும் கொள்கையளவில் சமத்துவமானவை.

பிரதேசங்களும், சமுதாயங்களும் விரிவான சட்ட ஆக்க அதிகாரங்களைக் கொண்டிருப்பதோடு தமது அலுவல்களை கொண்டியக்குவதற்கு ஏற்ற நிர்வாக அமைப்புக்களையும் கொண்டுள்ளன. சமஷ்டிச் சட்டம், பிரதேசச் சட்டம், சமுதாயச் சட்டம் என்பனவற்றை செயற்படுத்தத் தனித்தனியான நிர்வாக அதிகாரங்கள் உள்ளன. பிரதேச, மாநகர நிர்வாகங்கள் விரிவான அதிகார அமைப்புக்களாகச் செயற்படுகின்றன.

உதாரணமாக பெல்ஜியத்தின் ஜேர்மன் சமுதாயம் பிளமிஷ் சமுதாயத்தைவிட நூறு மடங்கு சிறியது. ஆனால் இரண்டினதும் சமுதாயச் சபைகள் கல்வி, பண்பாட்டு விவகாரங்களில் ஒரேயளவு அதிகாரங்களை உடையவை. பிளமிஷ் சமுதாயச் சபை, ஜேர்மன் சமுதாயச் சபையைவிடக் கூடிய அதிகாரம் உடையது என்று கூற முடியாது.

## அதிகாரப் பரவலாக்கல்

பெல்ஜியத்தில் அதிகாரப் பரவலாக்கம் விரிவான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சமஷ்டிச் சட்டமும், பிரதேசச் சட்டமும், சமுதாயச் சட்டமும் ஒன்றுக்கொன்று சமத்துவமானவை. அரசியல் யாப்புச் சட்டம் மட்டும் யாவற்றுக்கும் மேலானது. பிரதேசங்களும் சமுதாயங்களும் பல விடயங்கள் தொடர்பாக சமஷ்டி அரசுடன் நியாயாதிக்கத்தில் பங்கு கொள்கின்றன (Shared Jurisdiction).

உதாரணமாக பிரதேசங்களும், சமுதாயங்களும் தத்தம் பிரதேசங்கள் சார்ந்தளவான விடயங்களில் சர்வதேச உடன்பாடுகளைச் செய்துகொள்ளும் அதிகாரம் உடையன. உறுப்புரை 167 இதனை அனுமதிக்கிறது (சில மட்டுப்பாடுகளுடன்). உலகத்தின் சமஷ்டி முறைகளில் பெல்ஜியம் மாதிரியில் அதிகாரப் பரவலாக்கம் மிகவும் விரிவானதாக உள்ளது என்பது கவனிப்புக்குரியது.

பெல்ஜியத்தின் அரசியலை இணக்கத்தின் (Consensus) அடிப்படையில் நடத்திச் செல்லும் தேவை நீண்டகாலமாகவே இருந்து வந்துள்ளது. இதனால் கூட்டுறவு என்னும் உணர்வு அதன் அரசியல் யாப்பில் உள்ளார்ந்து அமைந்த விடயமாக இருந்து வருகிறது. அரசியல் யாப்பில் இந்த உணர்வு வெளிப்படையாக உறுப்புரை 143இல் கூறப்பட்டுள்ளது.

'ஒவ்வொரு சமஷ்டி அலகும் தனது பொறுப்புகளை உணர்ந்து கொள்வதோடு, வேறுபட்ட நலன்களின் காரணமாக எழக்கூடிய நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொண்டு சமஷ்டிக்கான விசுவாசத்துடன் செயற்படவேண்டும்' என்று

பெல்ஜியத்தில் சட்டவாக்க அதிகாரம் ஒவ்வொரு நிலையிலும் வழங்கப்பட்டுள்ள முறை,
இணைப்பு 1.

| சமஷ்டி அரசு | பிரதேசம் | சமுதாயங்கள் |
|---|---|---|
| தேசிய முக்கியம் உடைய விடயங்கள் | பிரதேசத்திற்குரிய பொருளாதார விடயங்கள் | பண்பாடு கல்வி சார்ந்த பிரச்சினைகள் |
| • பாதுகாப்பு<br>• உள்நாட்டுப் பாதுகாப்பு<br>• நீதி<br>• வரிவிதிப்புக் கொள்கை<br>• சமூகப் பாதுகாப்பு (வேலை யின்மை, இன்சுரன்ஸ் பென்சன், சுகாதாரம்)<br>• வெளிநாட்டு விவகாரம்<br>• அரசியல் யாப்பை திருத்தும் அதிகாரம் (பிரதேசங்கள், சமுதாயங்களின் அளவு, எண்ணிக்கை என்பன மாற்றுதலும் இதில் உள்ளடங்கும் | • பிரதேச பொருளாதார அபிவிருத்தி<br>• வேலைவாய்ப்புக் கொள்கை<br>• கைத்தொழில் மறுசீரமைப்பு<br>• சுற்றுச் சூழல்<br>• இயற்கைப் பாதுகாப்பு<br>• கிராம அபிவிருத்தி<br>• வீடமைப்பு<br>• நிலப் பயன்பாடு திட்டமிடல்<br>• நகர புரைமைப்பு<br>• நீர்வளம், கழிவகற்றல்<br>• சக்திவனக் கொள்கை<br>• பிரதேச விமான நிலையங்கள்<br>• பிரதேச பொதுப் போக்குவரத்து<br>• உள்ளூராட்சி, பிரதேச ஆட்சி<br>• விவசாயம்<br>• உள்நாட்டு வர்த்தகம்<br>• பிரதேசத்தோடு தொடர்புடைய சர்வதேச உறவுகள்<br>• விஞ்ஞான ஆராய்ச்சி தொழில் நுட்பம் | • பண்பாட்டு விடயங்கள்<br>• கல்வி (சில மட்டுப்பாடுகளுடன்) மொழி உபயோகம் (நிர்வாக மொழி, கல்விமொழி, பணியாளர்களுடன் வேலை கொள்வோர் - தொடர்பு கொள்ளும் மொழி, தனிநபர்களிற்கு சேவை வழங்கல் மொழி<br>• கலைகள்<br>• இளைஞர் விவகாரம் - கொள்கை<br>• உல்லாசப் பயணம்<br>• நோய்த்தடுப்பு சுகாதாரம்<br>• சமூகநலன் கொள்கை - சில விடயங்கள்<br>• சமுதாயங்களுக்கு இடையிலான தொடர்பு, சர்வதேச கூட்டுறவு (பண்பாடு, கல்வி, தனிநபர்களுக்கு வழங்கும் சேவைகள் தொடர்பான ஒப்பந்தங்கள்)<br>• அடிப்படை விஞ்ஞான ஆராய்ச்சி (சமஷ்டி அரசுடன் இணைந்து], |
| | | |
| இரு சபைகள் உள்ள அரசியல் யாப்பு முறை – மக்கள் பிரதிநிதிகள் சபையும் செனற்றும் | பிரதேச சபை- இச் சபை அரசின் நிறைவேற்றுக் கிளையாக செயற்படுகிறது | சமுதாயச் சபை (community council) இது ஒரு நிறைவேற்றுக் கிளையாக செயற்படுகிறது |
| மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு நேரடியாக தெரிவு. பிரதமர் அரசரால் நியமிக்கப்படுவார்.<br>மக்கள் சபையில் பெரும்பாண்மை பலமுடையவரை அரசர் பிரதமராக நியமிப்பார்.<br>செனற் சபைக்கு நேரடித் தேர்தல் நியமனம் என்பன மூலம் தெரிவு செய்யப்படுவர். | நேரடியாக தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் | நேரடியாக தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் |
| மக்கள் பிரதிநிதி சபை - 180<br>செனற் - 71,<br>பிரதமர் பிளமிங் இனத்தவராக இருப்பார் என்பது வெளிப்படையாகச் சொல்லப்பாடாத வழமை. காரணம் பிளமிங் பெரும்பான்மையினர்.<br>செனற் சபையில் அரசனின் பிள்ளைகள் (18 வயதிற்கு மேற்பட்டோர்) உறுபினராவர். | 75 உறுப்பினர்கள். இவர்களுள் சிலர் பிரஸ்ஸல்ஸ் நகரத்தை பிரதிநிதித்துவம் செய்வர் | 89 உறுப்பினர்கள் |

இவ்வுறுப்புரை கூறுகிறது. (இவ்வுறுப்புரையை 'Loyalty Clause' (விசுவாசம் தெரிவிக்கும் பிரிவு) என்று கூறுவர்).

அடுத்ததாக கனடா அரசியல் அமைப்பு எவ்வாறு உள்ளது என்பதைப்பற்றிப் பார்ப்போம்.

## கனடா பற்றி....

கனடா வட அமெரிக்க கண்டத்தில் உள்ள உலகின் இரண்டாவது பெரிய நாடு ஆகும். வடக்கே வட முனையும் கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலும் தெற்கே அமெரிக்க ஒன்றியமும் மேற்கே பசுபிக் பெருங்கடலும் அமெரிக்க ஒன்றிய நாடுகளின் அலாஸ்கா மாநிலமும் எல்லைகளாக அமைகின்றன.

கனடாவின் பரப்பளவு 9,984,670 கி.மீ ஆகும். இதில் தரை 9,093,507 கிமீ, நீர் 991,163 கிமீ ஆகும். கனடாவின் பரந்த பரப்பளவு காரணமாக அது பல்வேறு விதமான இயற்கையமைப்புகளையும் காலநிலைகளையும் கொண்டது.

கனடா இரண்டாவது பெரிய நாடாக இருந்தாலும் ஒப்பீட்டளவில் சிறிய மக்கள் தொகையையே கொண்டது. 39,793,773 (2024ஆம் ஆண்டு) மக்கள் இங்கு வசிக்கின்றார்கள். மக்கள் தொகை எண்ணிக்கை குடிவரவாளர்களாலேயே கூடுகின்றது.

ஏறக்குறைய 250 000 தமிழர்கள் கனடாவில் வசிப்பதாகப் பொது ஊடகங்கள் தெரிவிக்கின்றன. எனினும் தெளிவான ஒரு புள்ளி விபரம் இன்னும் கணக்கிடப்படவில்லை. பெரும்பாலான தமிழர்கள் ரொறன்ரோ நகரத்திலேயே வசிக்கின்றார்கள். பிறரும் மொன்றியால், வன்கூவர், கால்கரி போன்ற பெரும் நகரங்களிலேயே வாழ்கின்றார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் 80 களின் பின்பு ஈழப் போராட்டம் காரணமாக இங்கு அகதிகளாக வந்து குடியுரிமை பெற்ற ஈழத்தமிழர்கள் ஆவார்கள்.

## சமயப் பிரிவுகள்

கனடாவில் பல சமயத்தவர்கள் வாழ்கின்றார்கள். இவர்களில் 77.1% கிறித்தவ சமயத்தவர்கள் ஆவார்கள். குறிப்பிடத்தக்க தொகையினர் 17% சமயச்சார்பு அற்றவர்கள். எஞ்சிய 6.3% மக்கள் வேறு சமயங்களைப் பின்பற்றுகின்றார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரிழந்த...

மரியாதை செய்து, நாயின் உடலை ஊர்வலமாக எடுத்துச் சென்று நல்லடக்கம் செய்துள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டு 08ஆம் மாதம் 20ஆம் திகதி பிறந்த பைசா என பெயர் சூட்டப்பட்ட நாய்க்குட்டியை அதனது 08ஆவது வயதில் இருந்து, யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பகுதியில் வசிக்கும் நபர் ஒருவர் கடந்த பத்தாண்டு காலமாக வளர்த்து வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக நோய் வாய்ப்பட்டிருந்த பைசா எனும் பெயருடைய நாய் நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளது.

அதனையடுத்து, பிரேதப் பெட்டி ஒன்றில் பைசாவை வைத்து, வீட்டார், அயலவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பைசாவின் உடலை, பாண்ட் வாத்தியங்கள் முழங்க காரில் ஊர்வலமாக எடுத்துச் சென்று, உரிமையாளரின் காணியில் நல்லடக்கம் செய்தனர். (ந-7,33)

## மோ.சைக்கிள்...

கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் வட்டக்கச்சி மாயவனூர் பகுதியைச் சேர்ந்த கண்ணதாசன் கபிலன் என்ற 21 வயதான ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பாக இராமநாதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் இரு மாத காலத்திற்குள் விபத்துக்களினால் ஏழுபேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,316)

## பாராளுமன்றை...

மக்களுக்கும் நாட்டுக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், ஜனநாயக கட்டமைப்பிற்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய ஜனாதிபதிக்கான அதிகாரப் பரிமாற்றம், மக்களுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தாமல் ஜனநாயக ரீதியாக நடைபெற வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி (NPP) ஊடக மாநாட்டில் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி ரணில் செப்ரெம்பர் 21ஆம் திகதி நள்ளிரவுக்குள் பாராளுமன்றத்தைக் கலைப்பார் என ஊகங்கள் பரவி வருவதாக கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தைக் கலைக்க அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளதாகத் தெரிவித்த குமாரப்பெரும, இந்தத் தருணத்தில் அவ்வாறு செய்தால் அது மிகவும் நேர்மையற்ற செயலாகும் என்றார்.

"அரசியலமைப்பின் அடிப்படையில் ஜனாதிபதி எந்த நேரத்திலும் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும். புதிய ஜனாதிபதிக்கு இதுபோன்ற சூழ்நிலையில் பல விதிகள் உள்ளன. எனினும் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிக்கு ஜனநாயக ரீதியாக அதிகாரம் வழங்கப்பட வேண்டும். மக்கள் அதனால் பாதிக்கப்படக்கூடாது, அவ்வாறு பாராளுமன்றத்தை ஜனாதிபதி ரணில் கலைத்தால், அது அவர் நாட்டுக்கும் மக்களுக்கும் செய்யும் மிகவும் நேர்மையற்ற செயலாகும் என்றார். (ந-7)

## சட்டப்புத்தகத்தில்...

சபைகளுக்கு அதிகாரங்களை வழங்கும் திருத்தம் நாட்டின் சட்டக் கட்டமைப்பின் ஒரு பகுதியாகும்.

"அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை நான் முன்னரே கூறியுள்ளேன். அதை நான் எப்போதும் சொல்வேன். குறிப்பாக நாட்டிலுள்ள இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

13ஆவது திருத்தம், சட்டப் புத்தகங்களில் இல்லையா? சட்டத்தில் கூறப்பட்டுள்ளதை அமுல்படுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அது நாட்டின் ஒருமைப்பாட்டுக்குத் தீங்கானது அல்ல. அது உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, அதை நடைமுறைப்படுத்த வேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது. மற்றவர்கள் இதைக் கூறப்பயப்படுகிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் நான் அப்படி இல்லை. நான் சரியானதை அப்படியே சொல்கிறேன்" என அவர் தெரிவித்தார். (ந-7)

## தமிழரசுக்...

நிர்வாகச் செயலாளர் சேவியர் குலநாயகம் ஆகியோர் கூட்டிணைந்து யாழ். மார்ட்டீன் வீதியில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் வைத்து நேற்று முன்தினம் தயாரித்துள்ளனர்.

இதுகுறித்து மாவை.சேனாதிராஜா தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழரசுக்கட்சி தற்போது ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவரான சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது. எனினும் கட்சிக்குள் பல வேறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுவதன் காரணத்தினால் நாம் எமது மக்களைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. அதற்காகவே விசேட அறிக்கையொன்றை வெளியிடவுள்ளோம் என்றார்.

முன்னதாக, கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சி தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய்ந்து அறிக்கையளிக்குமாறு சேனாதிராஜா மற்றும் சி.வி.கே. சிவஞானம் ஆகியோரிடம் கேட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த இருவரும் யாழில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் கூடி உள்ளடக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக நீண்ட நேர ஆய்வுகள் நடத்தப்பட்ட தன் பின்னர் இறுதி அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கை 'தமிழ் மக்கள் தங்களின் விருப்பத்துக்கு ஏற்றவாறு அளிப்பதற்கான அறிவிப்பை உள்ளடக்கியதாக இருக்கும் என்று நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந-7)

## விபரீத...

குறித்த சிறுவனுக்கு அவனது தந்தை கைப்பேசியை கொடுப்பதற்கு மறுப்புத் தெரிவித்த நிலையில், சிறுவன் வீட்டின் அறையில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளான்.

இதில் அந்தோனியார் சேர்ச் வீதி, பெரியவிளான் பகுதியைச் சேர்ந்த மேர்வின் டயஸ் சிந்துஜன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவனா வான்.

சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.09.15
சீட்டிழுப்பு இலக்கம் 5597
A 6 4 7 5 2 9
அத சம்பத
A 7 5 2 9
சீட்டிழுப்பு இலக்கம் 172
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.09.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1627
H 08 12 38 58 H
Double Chance 67429

மெகா பவர்
திகதி 15/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1945
L 02 04 18 19 42
Double Chance 78897

லக்கி 7 VIP
திகதி 2024.09.15
சீட்டிழுப்பு இலக்கம் 423
Z 1 0 3 3 6 8 Z

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3839
சீட்டிழுப்பு திகதி 15.09.2024
T 36 47 51 54
T 43952
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.15
சீட்டிழுப்பு இலக்கம் 906
தனுசு 06 07 24 54 தனுசு
88541 21

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபர் பல்
15.09.2024 வெற்றி வாரம் 305 பழுப்பு
Y 8 0 9 4 4 3
அடுத்த சுபர் ஜக்பொட் ரூ.22,099,808.00
31269
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2571 வர்ணம் ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 15.09.2024 தினம் ஞாயிறு
05 37 48 57 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,931,387,60
DLB

சனிதா
திகதி 2024.09.15 வெற்றி வாரம் 4732
04 32 51 65 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,096,588.00
39064
DLB

சசிரி
வெற்றி வாரம் 529
சீட்டிழுப்பு திகதி 2024.09.15
கபிலம்
26 32 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,352,760/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4283 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.09.15 தினம் ஞாயிற்றுக்கிழமை
09 30 42 60 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,628,721.60
176523
DLB

ஜயோதா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 40 39 40 43 70
1747 மஞ்சள் 15.09.2024 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 545,156,598.60
DLB

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2397
சீட்டிழுப்பு திகதி : 2024.09.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,215,880.80
அட கோடிபதி ADA KOTIPATHI
06 47 59 62 L
513168
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 01 - 06 - 1949

மறைவு 15 - 09 - 2024

## கந்தையா ஸ்ரீஸ்கந்தராஜா

(ஓய்வுபெற்ற பட்டய பொறியியலாளர் Chartered Engineer)

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் 15.09.2024 நேற்று ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - நவமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெயராணி (ஓய்வுபெற்ற சிரேஷ்ட வைத்திய அதிகாரி - யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் பாசமிகு கணவரும் சங்கீதா(UK)(முன்னாள் விரிவுரையாளர் - University College of Jaffna), சுலக்ஷனா(பொறியியலாளர் - வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்), யதுநந்தன், சாம்பவி(Norway) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகந்தன்(UK), தினேஷ்(Norway) ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கீர்த்தன்(UK) அவரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பாலகுமாரன் மற்றும் பாலசரஸ்வதி அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (18.09.2024) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிராமணோடை, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(1951)

தகவல்: குடும்பத்தினர்.
077 114 4176

குருதி தேவை

O⁻ வகையுடையது.
அவசரமாகத் தேவை
தகுந்த சன்மானம்
வழங்கப்படும்.
077 640 6539
(1952)

இந்தியன் விசா சேவைகள்
ஒரு வருட E-Visa இப்பொழுது
9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)
(347)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை
பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள
நிரந்தரகுடியுரிமையுடனான 15'000
Care Giver வாய்ப்புக்களுக்கான
சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன்
Care Giver கற்கை நெறி மற்றும்
Immigration Services - விசா சேவைகள்.
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-1193)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1193)

Annamalian Sri Ragaventhirar Enterprises (pvt) Ltd

முகூர்த்த நாட்களுக்கான பதிவுகள்

அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபத்தில் (ASR WEDDING HALL) உங்கள் பிள்ளைகளின் திருமணம், பூப்புனித நீராட்டு விழாக்கள், கிறிஸ்தவ பதிவுத் திருமணங்கள், முஸ்லீம் நிக்ஹா(திருமணங்கள்) செய்ய விரும்புவோர்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவு செய்ய விரும்புவோர்கள் நேரடியாக வரவும். மண்டபத்தை 9 மணி முதல் 5 மணிவரை திங்கள் முதல் வெள்ளி வரை பார்வையிடலாம்.

அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர்
கலாசார திருமண மண்டபம்
இல.542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல.: 021 222 1355, 021 222 1356
(1912)

# 9ஆம் மாத நினைவஞ்சலி

## சிவபாதம் சிவசுதன்
## (பில்லா - சுதன்)



சுதன் நீ மண்ணை விட்டுப் போனாலும்
என் கண்ணுக்குள் இருப்பாயய்யா செல்லம்
நேற்று வரை எம் முற்றத்தில்
நட்டு வளர்த்த பூமரமய்யா
நீரூற்றி வளர்த்த செடியய்யா
வேரோடு சாய்த்துவிட்ட காலனுக்கு
கண்ணில்லையா ஐயா
வேர் விட்டு நீங்கள் விழு தெறிந்து
பெரு விருச்சமென எமக்கு
நிழல் கொடுப்பீர் என்றிருந்தோம்
காற்றோடு வந்து காலன் உனை
வெகு விரைவில் அழைத்துச் சென்ற
மாயம் என்னய்யா – என் செல்லமே
நீ திரும்பும் திசை எல்லாம்
ஒளியாய் தெரியுதடா
உன் காலடி காண எனக்கு
மெய் சிலிர்த்துப் போகுதையா
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும் கண்விட்டு
மறையாமல் என் கண்முன்னே
நிற்பாய் ஐயா! என் கண்முன்னே
கண்ணீர் விட்டு கதறினாய் ஐயா
என் செல்லமே என் கண்ணீர் வற்றிப் போச்சுதய்யா.

தோற்றம் 1983.11.30

மறைவு 2023.12.16

இல.411, கோவில் வீதி,
நல்லூர்.
(C-1194)

உன் நினைவால் வாடும்
உன் அப்பா, அம்மா, சகோதரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.